அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 26 | ஜூலை 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054

## ரணில் மோடி; 13 மைனஸ்?

## கறுப்பு ஜூலை: 4 தசாப்தங்கள் கடந்த பிறகும்



## குட்டிமணியின் கண்கள்



## கறுப்பு ஜூலையும் வெலிக்கடை சிறைப் படுகொலையும்!



## இலவம்பழம்

ஜூலை 9 நவாலி தேவாலயம் மீது புக்காரா குண்டு தாக்குதல் மேற்கொண்ட நாள்...

பொழில்



# சூரியப் புதல்வா!!

தகிக்கும் ஜூலை மாதம்
தலைக்குமேல்
நிழற்குடை
தேடவைக்கும்
சுக்கிரனின் பார்வை.

வெயிலுக்கு மட்டுமா
ஒதுங்கினோம்?
வெறியரின் ஷெல்லடிக்கும்
பயந்துதானே
பதுங்ககழி நாடினோம்!!

வட்டமிடும் வானூர்திகள்
'பரல்' களை உருட்டி விடும்
அடுத்தடுத்துக் குண்டுவீசும்
விமானங்கள்.
ஊரே பற்றி எரியும்!

சுற்றிச் சுழன்றுவரும்
'தும்பி'
கண்ணிற் படுவோரைக்
கலிபரால் துளைத்தெடுக்கும்!!

எந்த நேரம் எறிகணை
எம்மை நோக்கி வரும்?
தெரியாது
தெரிந்ததெல்லாம்
அசுமாத்தம் கண்டவுடன்
பாய்ந்தடித்து
பதுங்குகுழியில்
இறங்கவேண்டும்.

பாம்பும் அங்கே
பதுங்கியிருக்கும்
பயப்படக்கூட நேரமில்லை
எமக்கு!!

இதுதான்
எமது
நாளாந்த வாழ்க்கை!!
படிப்பும் பதுங்குகுழிக்குள்.
பிரசவமும் இந்த அகழிக்குள்!!

இந்த நிலை மாறுமா?
என்று
திகிலடைந்து
போயிருந்தோம் நாம்!!

இவன்!!
இவன் மட்டும்
புயலடங்கிய கடல்போல
அமைதி கொண்டிருந்தான்!

ஒரு சிலரைத் தவிர
வெளியே யாருக்கும்
தெரியவில்லை
இவன் நெஞ்சத்தில்
புதைத்து வைத்திருப்பது
ஒரு அக்கினிக் குஞ்சு என்று!!

வரலாற்றில்
புதியதொரு சரித்திரம்
எழுதத் துணிந்தவன் இவன்!!
எப்போதும் போலவே
குழந்தைச் சிரிப்பும்
குறும்புமாக இருந்தான்

பிரசவத்திற்குத் தயாரான
நிறை கர்ப்பிணிபோல
ஒரு விடியலைப்
பிரசவிக்க
இவன் தயாராகவிருந்தான்!!
எவருக்குமே தெரியவில்லை,
பெரு வெடிப்பொன்றை



நிகழ்த்தி
உலகையே
ஆட்டம் காண வைக்க
தயாராகிவிட்டான்
இவன் என்று!!

சூரியனின் புதல்வன் இவன்!!
எப்படி சும்மாவிருப்பான்?

சுதந்திரத்தைப் பெற்றெடுக்க
தம்மையே
ஆகுதியாக்கும்
தலைமையின்
கீழ் வளர்ந்தவன்
வாழாவிருப்பானா?

ஜூலை 5!
கந்தக மணத்துடன்
காற்றிலே கலந்தான்
எம் உயிரிலே உறைந்தான்..
அவன் வழியேகினர்
பலநூறு
இளைஞர்கள் யுவதிகள்!
சரித்திரம் படைத்தனர்!
சரித்திரமாகினர்!!

காலத்தை வென்ற
காவிய நாயகர் - இவர்
கடலிலும் இருக்கிறார்!
காற்றிலும் இருக்கிறார்!
எங்கள் மூச்சிலும் இருக்கிறார்!!
அகிலம் உள்ளவரை
இவர் வாழ்வர்!!
உங்கள் பாதம் பணிகிறோம்!

மாத இதழ் | மணம்: 26
ஜூலை
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| இலவம்பழம்... | 06 |
| ரணில்- மோடி; 13... | 09 |
| கறுப்பு ஜூலை; 4 தசாப்தங்கள்... | 12 |
| கறுப்பு ஜூலையும் வெலிக்கடை.... | 18 |
| குட்டிமணியின்... | 21 |
| வட, கிழக்கு தமிழர்.... | 23 |
| 'விமானங்கள் மீண்டும் வரும்'... | 25 |
| கடவுளே...!!!... | 27 |
| அப்பாவித் தமிழர்க்கு... | 28 |
| மனிதப் புதைகுழிகள்.... | 33 |
| சினம் கொள் (கவிதை).... | 37-38 |
| 'மாமன்னர்'களின்... | 39 |
| வலை (தொடர் கதை).... | 41 |
| நம்பிக்கை... | 44 |
| ஒரு குட்டிக் கதை... | 46 |
| புதிதாய்ப் பிறந்தன (கவிதை) | 47 |




## திருக்குறள்

**குறள் 462:**

“தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்”

**விளக்க உரை:**

தெளிந்து தேர்ந்த நண்பர்களுடன்சேர்ந்து,
ஆற்ற வேண்டிய செயலை திறம்பட ஆராய்ந்து,
தாமும் நன்கு சிந்தித்துச் செய்தால் ஆகாதது
ஒன்றுமில்லை.









அரசியல், சமூக, பொருளாதார இதழ்
எழுநிலம்

வங்கிகளையும் பங்குச்சந்தையையும் மூடுவதால் இலங்கை அரசு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்து விடுமா என்ன? எனக்கு நம்பிக்கை இல்லை.

வங்கிகளில் எங்கள் வைப்புக்கு பங்கம் வராமல் இருந்தால் சரி. நூலக எரிப்புக் கவிதை என்னைப் பாதித்துவிட்டது. நூலகம் எரிக்கப்பட்ட புகைமண்டலத்தை தூர விருந்து பார்த்தவர்களில் நானும் ஒருவன்.

**அன்ரன் மரியநாயகம்**
**(பெல்ஜியம்)**

புதைகுழி விவகாரம் மனதை மிகவும் சஞ்சலப்படுத்துகிறது. இந்தக் கட்டுரை வந்த பின்தான் முல்லைத்தீவு மனிதப் புதைகுழி விவகாரம் வெளிவந்திருக்கிறது.

எவ்வளவு முன்யோசனையுடனான கட்டுரை இது. தயவு செய்து மேலதிக விபரங்களைத் திரட்டித் தாருங்கள். மனது கிடந்து அடித்துக் கொள்கிறது.சிங்களவர்கள் செய்யும் அட்டூழியம் நாளுக்கு நாள் எல்லை மீறிப் போகிறது.

**-மகேஸ்வரி விநாயகமூர்த்தி**
**(பிரான்ஸ்)**

வடக்கையும் கிழக்கையும் பிரிக்க இனவாதிகள் படாதபாடு படுகிறார்கள். கிழக்கு சம்மந்தமான தகவல்களையும் அதிகமாகப் பகிருங்கள். தமிழ் மொழி கொச்சையாக எழுதப்படும் கட்டுரையை வாசிக்க வேதனையாக இருந்தது. இது எப்போதோ தொடங்கி விட்டது. இப்போது இது இன்னும் மோசமாகி விட்டது. அவ்வளவுதான். ரயில் விபத்து தொடர்பான மாலினியின் கவிதை மனதைத் தொட்டுவிட்டது.

**-ரதிதேவி சுதாகர்**
**ஒன்ராறியோ, கனடா.**

இம்மாத இதழின் அட்டைப்படம் சூப்பர். நிறைய கட்டுரைகள் வருகின்றன. புத்தகம் நல்ல தரமாக இருக்கிறது. ஆனால், கதைகளையும் கவிதைகளையும்சற்று அதிகப்படுத்தினால் என்ன? என்னைப் போன்றவர்களுக்கு கொஞ்சம் சந்தோசமாக இருக்குமே. ஏற்கனவே வரும் நெடுந்தொடர் 'வலை' சிறப்பு. இப்போதைக்கு அதை முடித்து விடாதீர்கள்.

**-கவிதா கனகரூபன்**
**லெஸ்டர்,**
**இங்கிலாந்து**

மார்க்சிம் கார்க்கியின் நாவல்களைப் படித்து எழுச்சியுற்ற காலம் ஒன்றிருந்தது. ரஷ்ய நாவல்களை தேடி வாசித்த காலம் அது. எங்களுக்கு 2009 இல் விழுந்த இடி மனதை நொருக்கி விட்டது.

இப்போதைய தலைமுறை எங்களுக்கு நடந்ததை நினைத்துப் பார்க்குமா? ஒன்றாய் நிற்குமா?மலையக மக்களின் அவல நிலையையும் வெளிக் கொணருகிறீர்கள். நல்லது.

**-முருகதாஸ் மாணிக்கம்**
**(ஒஸ்லோ)**

வலை தொடர்கதை சிறப்பாகப் போகிறது. குட்டிக்கதைகள் நல்ல படிப்பினைகள். கவிதைகள் சிறப்பு. நல்ல நல்ல கட்டுரைகளை பொருத்தமான சமயத்தில் வெளியிட்டு தூள் கிளப்புகிறீர்கள்.

மொத்தத்தில்சிறப்பாக, தரமாக புத்தகத்தை வெளியிடும் வெளியீட்டுக் குழுவிற்கு எங்கள் பாராட்டுகள்.

**-ஆரணி சேரலாதன்**
**குடும்பத்தினர்**
**லாஸ் ஏஞ்சல்ஸ், அமெரிக்கா**

மனிதப் புதைகுழி விவகாரத்தை ஐநாவிற்குக் கொண்டு செல்ல புலம்பெயர் தமிழர்கள் ஒன்றுதிரள வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர்குடும்பங்களும் நாங்களும் பதைப்புடன் இருக்கிறோம்.

சிங்களன் எங்களிடத்தில் விகாரைகள் கட்டுவதற்கும் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். இந்தியா தாம்பாளத்தில் விடுதலையை வைத்துத் தரப் போகிறது என்று இந்தியாவின் பின்னால் திரிந்த எங்கள் அரசியல்வாதிகள் இப்போ எங்கே பதுங்கியிருக்கிறார்கள்? அவர்கள் முகத்திரையைக் கிழியுங்கள்.

**-சந்திரன் சரவணபவன்**
**(ஜேர்மனி)**

வெளிநாட்டுப் போராட்டங்கள் பற்றிய கட்டுரைகளை வாசிக்கும் போது எங்கள் தேசத்தில் நிகழ்ந்ததும், தொலைத்ததும் ரணமாய் வலிக்கிறது. நாங்கள் பட்ட பாடு எல்லாம் இப்படி வீணாய்ப் போயிற்றே. எத்தனை பேரைக் கொடுத்தோம்? தயவு செய்து இளையோரைத் திரட்டி அவர்களின் மண்டைக்குள் எங்கள் வரலாறைப் புகுத்துங்கள். அவர்கள் தாயகப் பற்றுடன் இருக்க ஏதாவது செய்யுங்கள். இங்கு அவர்கள் குடியும் கூத்துமாக அலைகிறார்கள்.

**-ஊரவன், தாயகம்.**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
**Ezhunilam.com**

# நீதி கிடைக்குமா?

## ஆசிரியர் பக்கம்

**தமிழர்** வரலாற்றைப் புரட்டிப் போட்ட 'கறுப்பு ஜூலை இனப்படுகொலை' நடந்து 40 ஆண்டுகள் கடந்தும் அதன் வடு எம்மைவிட்டு அகலவில்லை. சுமார் 3500 தமிழர்களைக் காவு கொண்டது இந்த இனவழிப்பு. வெலிகடைச் சிறையில் தமிழ்க் கைதிகள் அரச அனுசரணையுடன் வெட்டியும்,சுட்டும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டனர். அவர்கள் உயிருடன் இருக்கும்போதே அவர்கள் கண்கள் பிடுங்கப்பட்டு, புத்தருக்கு படையல் செய்யப்பட்டு, பின்னர் கால்களால் நசுக்கப் பட்டிருக்கின்றன. சிங்களம் ஆடிய வெறியாட்டம் உலகறியும். ஆயினும் இதுவரை எவரும் தண்டிக்கப் படவுமில்லை, தமிழருக்கு நீதி கிடைக்கவுமில்லை.

இனப்படுகொலைக்கு உள்ளாகி இதுவரை இலட்சக்கணக்கான மக்கள் உயிரை விட்டிருக்கிறார்கள். உடமைகளை இழந்திருக்கிறார்கள். சொந்த மண்ணிலிருந்து அடித்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டிருக்கிறார்கள். வருடக்கணக்காக அவர்களைத் தேடியலையும் உறவுகளுக்கு 'மரணச் சான்றிதழ் வழங்கத் தயார்' என்ற அரசின் அறிவிப்பு எந்தனையோ சந்தேகங்களையும் அச்சங்களையும் கிளப்பியிருக்கிறது.

இந்த நிலையில், முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் குடிநீர் குளாய் அமைக்க தோண்டிய குழியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மக்களைக் கலங்க வைத்துள்ளது. பொலித்தீன் பைகளில் அடுக்கடுக்காக இருந்த மனித எச்சங்களுடன் பச்சை நிற சீருடை, பெண்களின் உள்ளாடைகள் என்பனவும் இருந்திருக்கின்றன. அந்தச் சூழலில் 13 இடங்கள் மனிதப் புதைகுழிகள் இருக்கும் இடங்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

இறுதிப் போரின் பின், வட்டுவாகல் பிரதேசத்தில் இராணுவத்திடம் சரணடைந்து, கைவிலங்குடன் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட பெண்புலிகளின் சீருடைகள் தான் இவை என்று அடித்துச் சொல்கிறார்கள் பார்த்தவர்கள்.இராணுவத்தின் சித்திரவதைகளுக்குப் பின்னர் இவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாக அஞ்சுகின்றனர் மக்கள்.

1984 இல், இந்தப் பிரதேச மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். 2011 வரை அது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்தது. இந்தப் பகுதியில் இப்போது மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப் பட்டிருப்பது இராணுவம்தான் கொலைகளைச் செய்ததை உறுதிப்படுத்துகிறது.

தவிரவும், சைவர்கள் மட்டும் வாழும் கேப்பாப்புலவிலும் வட்டுவாகலிலும் வழமைக்கு மாறாக கட்டப்பட்டிருக்கும் பெரிய விகாரைகளின் கீழும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற ஐயம் எழுந்துள்ள நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இதுதான் நடந்ததா என்ற அச்சம் தீவிரமடைகிறது.

மன்னாரில் 250 இற்கு மேற்பட்டவர்களின் எச்சங்கள், மண்டைதீவு தோமையார் ஆலய கிணற்றில் 60 இற்கும் மேற்பட்ட இளைஞர்களின் எலும்புக்கூடுகள், செம்மணி புதைகுழி என்பனவற்றுடன் இப்போது கொக்கிளாயும் இணைந்து கொண்டுள்ளது. 'இவை மனித எச்சங்களா என்று முதலில் கண்டு பிடிக்க வேண்டும். இராணுவத்திற்கும் இந்தப் புதைகுழிக்கும் சம்பந்தமில்லை' என்று அறிக்கை விட்டிருக்கிறார் இராணுவப் பேச்சாளர் ரவி ஹேரத். அந்த சமயத்தில் இராணுவத்தினருக்கு தலைமை தாங்கிய கோத்தபாய உத்தரவில்லாமல் இந்தப் படுகொலைகள் நடைபெற்றிருக்க முடியாது. கோத்தபாயவே இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

இறுதி யுத்தத்தில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தவர்களை, சர்வதேச விதிமுறைகளையும் மீறி கொல்ல உத்தரவிட்ட இனவெறியன் கோத்தபாய. மாத்தளையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி விவகாரத்திலும் கோத்தபாயவிற்கு தொடர்பிருப்பதாக தகவல்கள் வெளி வந்திருந்தன.

கொலைகளை மூடிமறைக்கும் நோக்கில், மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இருந்த காணாமற் போனோர் தொடர்பான கோப்புகளை அழித்துவிடுமாறு கோத்தபாய கட்டளையிட்டிருந்த விடயம் இப்போது அம்பலத்துக்கு வந்து அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

எங்கள் பிரதேசத்திலும் சாட்சியங்களாக இருக்கும் தடயங்களை அழிக்க முனைவார்கள்.கொக்கிளாய் புதைகுழி விவகாரம் வெளி வந்தவுடன், பாதுகாப்புப் படையினர், இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினர், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், நில அளவை, நீர் வழங்கல், தொலைத்தொடர்பு திணைக்களத்தினர், தொல்பொருள் திணைக்களத்தினர், மின்சார சபையினர் என்று பல தரப்பட்டோரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் நீதிமன்றகாவலுடன் புதைகுழி தோண்டும் வேலைகள் நடைபெறவுள்ளன.

கொலைகளைச் செய்தவர்களையே காவலுக்கு வைத்துக் கொண்டும், இனவழிப்புக்கு துணை போகும் திணைக்களங்களைக் கண்காணிப்பாளர்களாகக் கொண்டும் இந்தச் சாட்சியத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டுபோக முடியுமா? சர்வதேச விதிமுறைகளை மீறி புதைகுழிகள் தோண்டப்படுமாக இருந்தால் சாட்சியங்கள் அழிந்துவிடும் என்ற சுமந்திரனின் கூற்றை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

மனிதப் புதைகுழி விவகாரங்கள் சர்வதேச நியதிகளுடன் தோண்டப்பட்டு சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லப்பட வேண்டும். சர்வதேச அமைப்புகள் நியாயமான விசாரணை நடத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் கட்டப்பட்ட விகாரைகளின் கீழ் மனிதப் புதைகுழிகள் இருப்பதான மக்களின் அச்சம் சட்டபூர்வமாகக் களையப்பட வேண்டும். கோத்தபாயவும் அவனைச் சார்ந்தவர்களும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். எமக்கு நீதி வேண்டும்.

# இலவம்பழம்

பாரி



இலங்கைக்கு உதவுவதன் மூலம் யார் இலங்கையில் தனது பிடியை வைத்திருப்பது என்ற போட்டியில் சீனாவை விடவும் இந்தியாதான் ஒரு அடி முன்னே நிற்கிறது. தமிழர்களிற்கான தீர்வு என்று அடிக்கடி பேசுவதன் மூலம் தமிழர்களின் மனங்களை வென்று, இந்தியா எங்களுக்கு தீர்வைப் பெற்றுத்தரப் போகிறது என்றதொரு தோற்றப்பாட்டை தமிழர்களிடையே ஏற்படுத்தியிருக்கும் இந்தியாவை தமக்கான காவலனாக இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் எம் மக்கள். இலங்கையில் உறுதிப்படுத்தப்பட்ட இந்தியப் பிரசன்னத்திற்கு இதுவும்ஒரு முக்கியமான காரணி.பொருளாதார நெருக்கடி சூழ்ந்து நாடு வங்குரோத்தாக இருந்த நேரத்தில் இந்தியாதான் பல தடவைகள் அபயக்கரம் கொடுத்து இலங்கையை கை தூக்கி விட்டது என்பதையும் இலங்கை அரசால் மறுக்க முடியாது.

மறுபுறம், இலங்கையின் இப்போதைய சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசின் செல்லப் பிள்ளையோ இந்தியாவால் சீராட்டப்படுபவரோ அல்லர்.சனாதிபதி தேர்தல் காலத்தில் ரணிலை எதிர்த்து நின்றவருக்குத்தான் இந்தியாவின் ஆதரவிருந்தது நினைவிருக்கும். இந்தியாவின் உதவிக் கரங்களை பயன்படுத்திச் செய்த செயற்திட்டங்கள் மூலம் இப்போது ரணில் இந்தியாவின் மனதை வென்றிருப்பதாகத் தெரிகிறது. இதனால்தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இந்திய விஜயம் மேற்கொள்ளும் அழைப்பொன்றை ரணிலுக்கு விடுத்திருந்தார்.

இந்தியா – இலங்கை என்று வரும்போது அவர்கள் இருவரும் வைத்திருக்கும் ஒரே துருப்புச் சீட்டு தமிழ் மக்களின் பிரச்சனை. தமிழ் மக்களை வைத்து இலங்கையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைகிறது இந்தியா. இலங்கை, இந்தியா, சீனா இணைந்த முக்கோண ராஜதந்திர நடவடிக்கைகளில் அதே தமிழ் மக்களை வைத்து இந்தியாவை ‘லொக்’ பண்ண நினைக்கின்றது இலங்கை. இவற்றுக்கிடையில் இந்தியாவுக்கு கடிதங்களை வரைந்து தள்ளி தம்மை முன்னிலைப்படுத்தத் துடிக்கும் தமிழ்க்கட்சிகள் என்று தமிழர்களை வைத்து செய்யப்படும் வியாபாரம் இப்போது களை கட்டிவிட்டது.

தமிழர்கள் பிரச்சனை என்றால் 13 இல்லாமலா? இப்போதைய பேசுபொருள் யாருமே ஏற்றுக்கொள்ளாத, எந்த அதிகாரங்களையும் தமிழர்க்குத் தர முன்வராத, 36 வருடங்கள் கடந்தும் நடைமுறைக்கு வராத 13ம் திருத்தச் சட்டம்தான். அதுவும் தமிழ் மக்களையும் அவர்களின் பாதுகாவலர்களையும் அச்சுறுத்தி, வரையப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் தமிழர்க்கு எந்தவொரு தீர்வையும் தராமல் 36 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில், மீண்டும் திருத்திய பதிப்பாக வெள்ளித்திரைக்கு வரவிருக்கும் 13ஐப் பற்றி பேசுவது பொருத்தமானதாக இருக்கும்.





## 13ம் திருத்தச் சட்டம் என்றால் என்ன?

தமிழ்மக்களினது அபிலாசைகளைத் தீர்க்காத இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து, அதை நடைமுறைப்படுத்துவதற்காக, 1987 நவெம்பரில் இலங்கையில் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தம்தான் 13ம் திருத்தச் சட்டம். மாகாண சபை முறைகள் கொண்டுவரப்பட்டு, சில அதிகாரங்களை அதிகாரப்பரவல் செய்ய வழி செய்யும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

தமிழும் உத்தியோகபூர்வ மொழி என்றும், ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டது. நீதிமன்ற அதிகாரம், பாதுகாப்பு விதிகள் என்பனவற்றிலும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

தேசிய பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம் என்பன மத்திய அரசாங்கத்திடம் இருக்கும் என்றும், பொலிஸ், காணி அதிகாரப் பகிர்வுபற்றி மத்திய அரசுடன் கலந்துரையாடி, இணக்கம் கண்டு செயற்பட மாகாண சபைகளுக்கு உரிமை வழங்கப்படும் என்றும் சொல்கிறது இந்தச் சட்டத் திருத்தம்.

மக்களுக்கு எந்தத் தீர்வையும் பெற்றுத்தராது என்று புலிகளால் நிராகரிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை மக்களில் பெரும்பான்மையோரும் அங்கீகரிக்கவில்லை. ஆனால் இந்தியாவின் அழுத்தத்திற்கு முன்னால் புலிகளாலும் அப்போது எதுவும் செய்ய இயலவில்லை. வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணசபை என்பதால்ஒரு இடைக்காலத் தீர்வாக இருந்துவிட்டுப் போகட்டும் என்று ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

அப்போது அதிகாரத்தில் இருந்த ஜே.ஆர். ஜெயவர்தன பாராளுமன்றில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் இருந்ததும், பாராளுமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா கடிதங்களை அவர் ஏற்கனவே வாங்கி வைத்திருந்ததும்தான் சட்டத் திருத்தம் பாராளுமன்ற அங்கீகாரம் பெறக் காரணமாயின. ஆனாலும், வாய் வார்த்தையாக,தமிழ் மக்களுக்கு சிறிய அதிகாரம் வழங்கப்படும் என்று ஒரு பேச்சுக்கு கூறுவதைக்கூட சிங்கள மக்கள் ஏற்கத் தயாரில்லை. புத்த பிக்குகளும் ஜேவிபி, ஹெல உறுமய போன்றவையும் 13இற்கு தமது கடும் எதிர்ப்பைக் காட்டினார்கள்.

1988 இல் வடக்கு – கிழக்கு இணைந்ததாக இருந்த மாகாணசபைஜேவிபி தொடர்ந்த வழக்கினால், 2006 இல் வடக்கும் கிழக்குமாக துண்டாடப்பட்டது.

வடக்கு மாகாணசபை, கிழக்கு மாகாணசபை என்று பிரிக்கப்பட்டதை கடுமையாக எதிர்த்த சம்பந்தன் தரப்பு 2008 இல் நடந்த மாகாணசபைத் தேர்தலை எதிர்த்தது.அதே தரப்பு 2012இல் விக்கினேஸ்வரனை தேர்தலில் நிறுத்தி, வடமாகாண முதலமைச்சராக்கி, தனது கொள்கையை மாற்றிக் கொண்டது. அதற்குப்பின்னான காலங்களில்,வருடக்கணக்காக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. இனியும் திட்டமிட்டபடி தேர்தல் நடக்குமா என்றால் சாத்தியம் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

எந்த அதிகாரங்களும் அற்ற, காகிதத்தில் மட்டுமே 36 வருடங்களாக காத்துக் கொண்டிருக்கும் 13 இற்கு மறுபடியும் மவுசு ஏறிவிட்டது. இந்தியாவிற்கு புறப்படுவதற்கு முன்னர், பொலிஸ் அதிகாரமற்ற மாகாணசபை தீர்வை மட்டுமே தமிழர்களுக்கு வழங்க முடியும் என்று நாட்டுமக்களுக்கும், [இதற்கு மேல் பேசவேண்டாம் என்று மறைமுகமாக] இந்தியாவிற்கும் தெரிவித்துவிட்டுத்தான் மோடியைச் சந்திக்கச் சென்றார் ரணில்.இந்தியாவின் ஹொங்காங் என்று சொல்லப்படும் இலங்கையில், தனக்குச் சாதகமாக, திருத்தப்படும் ஒரு 13ஐக் கொண்டுவர இந்தியா முடிவெடுக்கும் சாத்தியம் உண்டா என்பதும் ஐயத்திற்கு இடமானதே.

இப்போதும் 13ஐப் பற்றிக் கதைத்த உடனேயே ஜேவிபியும் ஹெல உறுமயவும் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து விட்டன. போராட்டங்கள் வெடிக்கும் என்கின்றன. அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்று எச்சரிக்கின்றன.

‘இப்போது தருவதை வாங்கிக் கொள்ளாவிட்டால் வருங்காலத்தில் இதுவும் கிடைக்காது, முதலில் எது கிடைத்தாலும் வாங்கிக் கொள்ளுங்கள்’ என்று இந்தியாவின் எண்ணப்பாங்கை வாய்வழி மொழிந்திருக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்.‘2005 இல் நான் தர இருந்ததை வாங்க மறுத்து விட்டார்கள். இனி, இது மட்டும்தான் கிடைக்கும்’ என்கிறதான ரணிலின் தொனியுடன் இது ஒத்துப்போவது தெரிகிறதல்லவா?

இதற்குப் பிறகும், சமஷ்டியை வாங்கித்தாருங்கள் என்று கஜேந்திரகுமார் பிரிவும், 13ஐ முழுமையாக அமலாக்க நெருக்கடி கொடுங்கள் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், 13க்கும் அப்பால், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளதை முழுமையாக அமல் செய்ய கிடுக்கிப் பிடி போடுங்கள் என்று சம்பந்தர் ஐயா தரப்பும் தனித்தனியாகக் கடிதம் எழுதி தங்கள் ஒற்றுமையை உலகறியச் செய்திருக்கிறார்கள்.

‘இருப்பதை எடுப்பது நல்லதா? தீமை பயக்குமா?’ என்கிற விவாதங்கள் புத்திஜீவிகளிடையே ஆரம்பித்து விட்டன. வெற்றுப் பெட்டியை தருவதைப்பற்றி யோசிக்கலாம் என்னும் சனாதிபதி, அதையும் கொடுக்கக்கூடாது என்னும் சிங்களக் கட்சிகள், பெட்டிக்குள் கொஞ்சமாவது வைத்துத் தாருங்கள் என்று கெஞ்சும் தமிழ் அரசியல்வாதிகள் இவர்களுக்கிடையில், இந்தியா தங்கத் தாம்பாளத்தில் தீர்வைப் பெற்றுத்தரும் என்று இன்னமும் காத்திருக்கும் ஒரு பகுதி மக்கள். என்ன நடந்தால் என்ன என்று எதைப்பற்றியும் அக்கறைப்படாத இன்னுமொரு சாரார். இவற்றிற்கு இடையில் தள்ளாடுகிறது தமிழ் தேசியம்.

‘மாகாண சபை என்னும் முறைமையே இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு பொருந்தாது, மாவட்ட அபிவிருத்தி சபை போன்ற





அதிகாரப் பரவலாக்கல்தான் பொருத்தமானது' என்கிறார் முன்னைநாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா. தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமை நியாயத்தின்பால், அவர்களின் தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில், மாகாண சபைகளை விடக் கூடிய அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்கின்றனர் சில புத்திஜீவிகள். மொத்தத்தில், வீதியில் மக்களை இறக்கி மீண்டுமொரு போராட்டத்தை நடத்துவதற்கு பொருத்தமான தலைப்பு அகப்பட்டுவிட்டதாகவே பெரும்பான்மையினர் கருதுகின்றனர்.

இடையில் ஒரு சம்பவத்தை ஞாபகமூட்ட வேண்டும். 2017 இல் நடந்த சம்பவம். கொக்கிளாய் கருநாட்டுக்கேணியில் அடாத்தாகக் குடியேறிய இரண்டு சிங்கள மீனவர்களை வெளியேற்ற அரச காணி மீளப்பெறும் சட்டத்தின் மூலம் வழக்குத் தொடரப் பட்டிருந்தது. அவர்கள் வெளியேற வேண்டும் என்று 2018 தையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றும் தீர்ப்பு வழங்கி விட்டது.

அதை எதிர்த்து, அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை உயர் நீதிமன்றில் போட்டிருந்தனர் அந்த மீனவர்கள். ஆனால் உயர் நீதிமன்றம் அந்த வழக்கை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டது. அத்துமீறிய மீனவர்கள் தீர்ப்பின் பின் வெளியேறி இருக்க வேண்டும். ஆனால் 2018 இல்,ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசின் மகாவலி காணி அபிவிருத்தி சபை அந்த மீனவர்கள் அடாத்தாகக் குடியேறிய நிலத்துக்கு சட்டபூர்வமாக காணி அனுமதிப் பத்திரத்தை வழங்கி அத்துமீறலை நியாயமாக்கினர்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? நீதிமன்றத் தீர்ப்பையும் அரச காணிச் சட்டத்தை நிலைநாட்ட முற்படும் தமிழ் அதிகாரிகளின் செயற்பாடுகளையும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு புறக்கணிக்கலாம் மகாவலி அபிவிருத்தி சபைக்கிருக்கும் கட்டற்ற அதிகாரங்களை நீதிமன்றும், சட்டங்களும் கட்டுப்படுத்த முடியாது என்பதை இச் சம்பவம் உறுதிப் படுத்தியது. முதலமைச்சராகவிருந்த விக்கினேஸ்வரனாலும் எதுவும் செய்ய முடியவில்லை.வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது.

அதாவது 13ம் திருத்தச் சட்டத்தின் கீழ், அரச காணிகள் தொடர்பில் மாகாண சபைகளுக்கு எந்த அதிகாரமும் இல்லை. மத்திய அரசைத்தான் நாடி நிற்கவேண்டும். மகாவலி அபிவிருத்தி சபைக்கு மாகாண சபையை விட எண்ணற்ற அதிகாரங்கள் உண்டு. அரச காணிகள் தொடர்பில் 13ம் திருத்தச் சட்டத்தில் இருக்கும் பலவீனத்தை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

கொரோனா வைரஸ் என்னும் கொடிய கிருமி இந்த உலகை ஆக்கிரமித்த பின்னர்,எத்தனை வருடங்கள் கடந்தாலும் இந்த வைரஸ் என்றும் அழிந்து போகாது நிரந்தரமாக எங்களுடன் தங்கிவிடும் என்று கருதுகிறார்கள் விஞ்ஞானிகள். ஒரு வகையில் 13ம் திருத்தச் சட்டமும் இந்த வகையானது தான். நடைமுறைக்கு வரா விட்டாலும் 13ம் திருத்தச் சட்டம் காலத்துக்கும் எங்களுடன் ஒட்டிக்கொண்டுதான் இருக்கப் போகிறது.

### தேசியத்தலைவர் பிரபாகரன் எப்போதும் சொல்லும் ஒரு கதை எம்மவர்க்கு ஒரு முக்கிய படிப்பினை:

சிறுபான்மை மக்களுக்கு எந்த உரிமைகளும் கொடுக்காமல் கொடுமைப்படுத்தி வந்தது ஒரு அரசு. காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரங்கள், உடமைகள் அழிப்புகள், படுகொலைகள், நிலப்பறிப்புகள் என்று தொடர்ந்து இறுதியில் தரப்படுத்தல் என்று கல்வியிலும் கை வைத்தது. அகிம்சை வழியில் போராடிய மக்கள் மேலும் மேலும் அழிவுகளைத்தான் சந்தித்தனர். இதற்கு மேலும் பொறுக்க முடியாத இளைய தலைமுறையினர் ஆயுத மேந்தினர்,தமது உரிமைகளுக்காக உயிரைக் கொடுக்கத் துணிந்தனர்.அதனைத் தடுப்பதற்காக, மக்களைப் படாதபாடு படுத்தியது அரசு. பொருளாதாரத் தடைகளைப் போட்டு மக்களை வாட்டியது. அத்தியாவசிய பொருட்களுக்கு தடை விதித்தது. தற்சார்பு பொருளாதாரத்தில் மக்கள் வாழப் பழகினர். சவர்க்காரம்கூடத் தடைப்பட்டது. மக்கள் பனம்பழத்தை உபயோகித்து உடைகளைத் துவைத்தனர்.

ஒரு கட்டத்தில் ஆயுததாரிகளுடன் பேச்சு வார்த்தைக்குப் போனது அரசு. அப்போது 'சவர்க்காரம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை உள்ளே வர அனுமதிக்கிறோம். சண்டையைக் கைவிடுங்கள்.' என்றது அரசு. நீண்ட காலப் போர். பல வருட கஷ்டம். மேற்தட்டு, மத்திய மேற்தர மக்களில் சிலர் சந்தோஷம் கொண்டனர். 'பிறகென்ன, பொருட்களுக்கு தடை இனி இல்லை. உடன்பாட்டுக்கு வரலாமே' என்றனர்.

### சவர்க்காரத்துக்காகவா நாம் போராடினோம்?

'அடிப்படையை மறந்தால் நாம் எப்போதும் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டும்' என்பார் தேசியத் தலைவர்.



தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கான தீர்வாக, அதிகாரப் பரவலற்ற, இப்போது பொலிஸ் அதிகாரமும் தரப்பட மாட்டாது என்று சொல்லப்படும் 13 ஐ மனமுவந்து ஏற்றுக்கொள்வதும் சவர்க்காரம் கிடைக்கிறது என்று சந்தோசப்படுவது போன்றதுதான்.

இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டத் துடிக்கும் இலங்கை, இந்திய அரசுகள். பழம் பழுக்கும் என்று காத்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள். அவர்களை நம்பி ஓட்டுப்போடும் மக்கள்.

இனி சீர்தூக்கிப் பார்த்து,முடிவெடுக்கும் உரிமையை மக்களிடமே விட்டு விடுவோம்.



நிலாந்தன்

# ரணில் மோடி; 13 மைனஸ்?

டெல்லிக்கு போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன், கடந்த 18ஆம் தேதி செவ்வாய்க்கிழமை,ரணில் விக்கிரமசிங்க தமிழ்க்கட்சிகளுக்கு எதைத் தரமுடியும் என்று கூறினாரோ, அதைத்தான் இந்தியப் பிரதமரின் முன்னிலையில் வைத்தும் திரும்பக் கூறிவிட்டு வந்திருக்கிறார்.தமிழ்க் கட்சிகளுக்கு அவர் சொன்னது போலீஸ் அதிகாரம் இல்லாத ஒரு மாகாண சபை. போலீஸ் அதிகாரம் என்பது என்ன? ஒரு சட்டமன்றம் தான் உருவாக்கிய சட்டங்களை அமல்படுத்துவதற்கான ஓர் அதிகாரக் கட்டமைப்புத்தான்.

அதை இன்னும் தெளிவாகச் சொன்னால்,ஒரு சட்டமன்றத்தின் அதிகாரத்தை அமுல்படுத்தும் பிரிவு போலீஸ்தான்.உலகம் முழுதும் அதுதான் நிலைமை. அந்த அதிகாரம் இல்லையென்றால், நிதி அதிகாரம், கல்வி அதிகாரம், காணி அதிகாரப் உட்பட வேறு எந்த





அதிகாரம் இருந்தாலும் பலன் இல்லை. எனவே போலீஸ் இல்லாத மாகாண சபை என்பது 13 மைனஸ்தான்.

அதைத்தான் தன்னால் தர முடியும் என்று ரணில் தெளிவாகத் திட்டவட்டமாகத் தமிழ்க் கட்சிகளுக்குச் சொன்னார். 2005இல் நான் தர முற்பட்டதை நீங்கள் நிராகரிதீர்கள்.அதே தவறை இந்தமுறையும் செய்யாதீர்கள் என்று ஒரு விதத்தில் எச்சரிக்கையாகவும் அவர் அதைச் சொன்னார். கொழும்பில் வைத்து அவர் அதைத் தமிழ்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் சேர்த்துத்தான் சொன்னார்.

இந்தியாவை நோக்கி 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்ட கட்சிகளுக்கும், 13ஐத் தீர்வின் தொடக்கமாக ஏற்றுக்கொண்ட கட்சிகளுக்கும்,13 வேண்டாம்,கூட்டாட்சிதான் வேண்டும் என்று கேட்ட கட்சிகளுக்கும் சேர்த்துத்தான் அவர் அதைச் சொன்னார்.

இந்தியாவில் வைத்தும் அதை அவர் மீளச்சொன்னார் ‘இந்த வாரம் நான் முன்வைத்த விரிவான முன்மொழிவு’ என்று அவர் அதைக் கூறுகிறார். அது மட்டுமல்ல, ‘வடக்கு அபிவிருத்தித் திட்டம்’ என்ற வார்த்தையை அவர் பயன்படுத்துகிறார்.வடக்கு–கிழக்கு என்று தமிழர்களின் தாயகத்தை இணைத்துக் கூறவில்லை.

எனவே ரணில் மிகத் தெளிவாக இருக்கிறார்.அதைவிடக் கூடுதலாக அவர் துணிச்சலாகவும் இருக்கிறார். கொழும்பில் சொன்னதையே டெல்லியில் வைத்தும் சொல்கிறார்.கோத்தாபய தனது முதலாவது இந்திய விஜயத்தின் போதும் இனப்பிரச்சினை தொடர்பில் இதே தொனியில்தான் பேசினார். அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்தவர். ஆனால் ரணில் என்ன துணிச்சலில் அவ்வாறு

> “தமிழர்களுக்கு என்று யாழ்ப்பாணத்தில் இந்தியா ஒரு கலாசார மண்டபத்தை கட்டியது.ஆனால் அதனை முழுமையாக இயக்குவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கொழும்பின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க ஏன் இந்தியாவால் முடியவில்லை? பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்த இன்றுவரை முடியவில்லை. காங்கேசன் துறையிலிருந்து தமிழகத்துக்கு கப்பலை ஓட விட இன்றுவரை முடியவில்லை. இப்படித்தான் இருக்கிறது இந்தியாவின் பிணைப்புத் திட்டங்கள்.”


கூறுகிறார்?அவருடைய துணிச்சலுக்கு பின்வரும் காரணங்கள் உண்டு.

முதலாவது காரணம் எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கக் கூடிய ஒரே தலைவர் தான் மட்டுமே என்ற துணிச்சல். எந்தப் பேரரசையும் அதிகம் நெருங்கிச் செல்ல வேண்டிய தேவை, வாழ்க்கைப் பின்னணி தனக்கு இல்லை என்று அவர் நம்புகிறார்.ராஜபக்ஸக்களோடு ஒப்பிடுகையில் அது அவருடைய பலந்தான்.அதனால்தான் இந்தியா அவர் பதவிக்கு வருவதை முதலில் விரும்பவில்லை.டளஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு இந்தியா தமிழ்க் கட்சிகளைக் கேட்டது.

இரண்டாவது துணிச்சல், தமிழ்க் கட்சிகளால் போராட முடியாது என்ற அவரது நம்பிக்கை. கூட்டாட்சி அல்லது முழுமையான 13 அல்லது கொன்ஃபெடரேஷன் போன்ற எந்த கோரிக்கைகளை முன்வைத்தாலும், எந்த ஒரு தமிழ்க் கட்சியும் அதற்காக போராடும் திராணியோடு இல்லை என்பதை அவர் சரியாகக் கணித்து வைத்திருக்கிறார்.

மாறாக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக ஆங்காங்கே தெட்டந் தெட்டமாகப் போராடத்தான் தமிழ்க் கட்சிகளால் முடியும் என்றும் அவர் சரியாகக் கணித்து வைத்திருக்கிறார்.பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தைப் போல அல்லது எழுக தமிழ், பொங்கு தமிழ்களைப் போல,பெருமளவு மக்களைத் திரட்டிப் போராடும் நிலைமையில் தமிழ்க் கட்சிகள் இல்லை என்பதை அவர் சரியாகக் கணித்து வைத்திருக்கிறார்.மேலும் தமிழ்க் கட்சிகளின் சிறுதிரள் போராட்டங்களின் விளைவாக, தனக்குச் சிங்களபௌத்த வாக்குகள் அதிகம் சேரும் என்பதும் அவருடைய கணிப்பு.இப்பொழுது 13 மைனஸ் என்று கூறுவதன்மூலமும் அவருக்கு சிங்கள பௌத்த வாக்குகள் திரளும்.

மூன்றாவது துணிச்சல், இந்தியாவுக்குள்ள வரையறைகளை அவர் விளங்கி வைத்திருக்கிறார்.13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவுதான்.ஆனால் அது தமிழ் மக்களின் தெரிவு அல்ல. மிகச்சரியான வார்த்தைகளில் சொன்னால்,அது இந்திய இலங்கை அரசுத் தலைவர்களின் குழந்தை.எனவே அதற்கு இந்தியாவும் இலங்கையுந்தான் பொறுப்பு.அதை அமல்படுத்துவதற்கு இரண்டு நாடுகளுந்தான் பொறுப்பு. ஆனால் ஒன்றேகால் இலட்சம் இந்தியப் படைகளை



வைத்துக்கொண்டு அதைச் செய்ய இந்தியாவால் முடியவில்லை. கடந்த 36 ஆண்டுகளாக 13ஐ முழுமையாக அமல்படுத்துமாறு இலங்கைமீது நிர்ப் பந்தங்களைப் பிரயோகிக்க இந்தியா வால் முடியவில்லை. அல்லது இந் தியா விரும்பவில்லை. குறிப்பாக, போர் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை என்று ஒரு சாட்டைச்

**ரணில் மிகத் தெளிவாக இருக்கிறார். அதைவிடக் கூடுதலாக அவர் துணிச்சலாகவும் இருக்கிறார். கொழும்பில் சொன்னதையே டெல்லியில் வைத்தும் சொல்கிறார்.கோத்தாபய தனது முதலாவது இந்திய விஜயத்தின் போதும் இனப்பிரச்சினை தொடர்பில் இதே தொனியில்தான் பேசினார். அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்தவர். ஆனால் ரணில் என்ன துணிச்சலில் அவ்வாறு கூறுகிறார்? அவருடைய துணிச்சலுக்கு பின்வரும் காரணங்கள் உண்டு.**

சொன்னால். 2009க்குப் பின் கடந்த 14 ஆண்டுகளாக ஏன் அதனைச் செய்ய முடியவில்லை?

13ஆவது திருத்தத்தை மட்டுமல்ல, இலங்கைத் தீவில் இந்தியாவின் பாது காப்பு மற்றும் பொருளாதார நலன்கள் சார்ந்த விடயங்களில்கூட இந்தியா விரும்பிக் கேட்ட எத்தனை விடயங் களை இலங்கை கொடுத்திருக்கிறது? கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா கேட்டது. ஆனால் இலங்கை மேற்கு முனையத் தைத்தான் தருவேன் என்று கூறியது.

தமிழர்களுக்கு என்று யாழ்ப்பாணத் தில் இந்தியா ஒரு கலாசார மண்ட பத்தை கட்டியது.ஆனால் அதனை முழுமையாக இயக்குவதற்கு உரிய ஏற் பாடுகளைச் செய்யுமாறு கொழும்பின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க ஏன் இந்தியாவால் முடியவில்லை? பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்த இன்றுவரை முடியவில்லை.காங்கேசன் துறையி லிருந்து தமிழகத்துக்கு கப்பலை ஓட விட இன்றுவரை முடியவில்லை. இப் படித்தான் இருக்கிறது இந்தியாவின் பிணைப்புத் திட்டங்கள்.

ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை புதிய பிணைப்பு திட்டங்கள் குறித்த ஒப்பந்தங்கள் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.இந்தியாவிடமிருந்து மின் சாரம்,இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எரிபொருள் விநியோ கக் குழாய்களை உருவாக்குவது,இரு நாடுகளுக்கும் இடையில் பாலங் கட்டுவதற்கான வாய்ப்புக்களைப் பரிசீ லிப்பது போன்ற திட்டங்கள் உரையா டப்பட்டுள்ளன.

ஆனால் இவையாவும் முழுமை யாக நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் எதைக் குறித்தும் கருத்துச் சொல்ல லாம்.ஏனென்றால் கடந்த மூன்று தசா ப்தங்களுக்கு மேலாக இந்தியா இலங் கைத்தீவில் விரும்பி கேட்ட எதையுமே முழுமையாகப் பெறமுடியவில்லை.

அதுமட்டுமல்ல, அம்பாந்தோட்டையில் சீனா கிட் டத்தட்ட நூறாண்டுக்கு குந்தியிருக்கும். கொழும்பு துறைமுகத்திற்கு அருகே செயற்கைத்தீவில் அதாவது துறைமுக பட்டினத்தில் சீனப் பிரசன்னம் எப்பொழுதுமிருக்கும். இலங்கைத்தீவின் நவீன வர லாற்றில் சீனப் பிரசன்னம் அதிகரித்த காலகட்டம் என்று பார்த்தால் 2009க்குப் பின்னரான கடந்த 14 ஆண்டுகள்தான்.தனது செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் இச்சிறிய தீவில் சீன விரிவாக்கத்தைத் தடுக்க இந்தியாவால் முடியவில்லை.இச்சிறிய தீவு தனக்குள்ள கேந்திர முக்கியத்துவத்தின் அடிப்ப டையில் எல்லாப் பேரரசுகளையும் கெட்டித்தனமாக வெட்டியாண்டதன் விளைவாக சீனா தீவுக்குள் நுழைந்து விட்டது.

இவை அனைத்தையும் கூட்டிக்கழித்துப் பார்த் தால்,இந்தியா 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காது என்பதனை ரணில் சரியாகவே கணித்திருப்பார். பொருளாதார நெருக்கடியின்போது நாட்டிற்கு முதலில் உதவியதும் அதிகம் உதவியதும் இந்தியாதான். அதன்மூலம் இந்தியா ஆறு உடன்ப டிக்கைகளைச் செய்து கொண்டது.

அதாவது சிறிய இலங்கைத்தீவின் மீது அழுத் தங்களை பிரயோகிப்பதன்மூலம் இந்தியா பெற்றுக் கொண்டது இந்திய–இலங்கை உடன்படிக்கையைத் தான்.அதன்பின் இந்தியா பெற்றுக் கொண்டவற்றில் பெரும்பாலானவை இலங்கைத்தீவை அரவணைப்ப தன்மூலம் பெற்றுக் கொண்டவைதான்.கடந்த ஆண் டிலும் அதுதான் நடந்தது. எனவே 13ஐ முழுமையாக அமல்படுத்துவதில் இந்தியாவுக்கு இருக்கும் வரைய றைகளை அல்லது இயலாமைகளை ரணில் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்.அந்தத் துணிச்சலில் தான் அவர் கூறுகிறார் 13 மைனஸைத்தான் தரு வேன் என்று.

ஆயின், 13 ஐ முழுமையாக அமல்படுத்தக் கேட்ட கட்சிகளும், சிவில் சமூகங்களும், சமஸ்டி யைக் கேட்ட கட்சிகளும் சிவில் சமூகங்களும் அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகின்றன? இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர்கள் நம் பும் இறுதி இலக்கை நோக்கிப் போராடுவதற்கு அவர்கள் தயாரா?இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐ.நா.வோ, அல்லது தந்தை செல்வா கூறியது போல கடவுளோ,யாராக இருந்தாலும் தமிழ்மக்களுக்குத் தங்கத் தட்டில் தீர்வை வைத்துத் தரப்போவதில்லை. போராடினால்தான் தீர்வு கிடைக்கும்.போராடிய படியால்தான் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு





குறைந்தபட்சம் பதின்மூன்றாவது கிடைத்தது. ஆனால் இப்பொழுது தமிழ் மக்களின் பேரம்பேசும் பலம் இறங்கிவிட்டது என்று ரணில் நம்புகிறார். 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது ஆகிய அதன் பொறுப்புகளை சிறீலங்கா பூர்த்திசெய்யும் என்று நம்புகிறோம் என்று இந்திய பிரதமர் கூறியதை அவர் ஒரு சம்பிரதாயபூர்வமான, சடங்கார்த்தமான வேண்டுகோளா கவே விளங்கிக் கொள்வார். எதிர்க்கட்சிகள் எதிர்கின்றன,பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்று கூறிக்கொண்டு அவர் 13 ஐ முழுமையாக அமுல்படுத்த மாட்டார்.

ஆனால், இந்தியா மேலும் புதிய கனெக்ரிவிற்றி– பிணைப்புத் திட்டங்களில் கவனத்தைக் குவிப்பதாகத் தெரிகிறது. கடல் வழிப் பிணைப்பு, தரை வழிப் பிணைப்பு, வான் வழிப் பிணைப்பு, சக்தி, மின்சார, எரிபொருட் பிணைப்பு, வலுசக்தி,வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பிணைப்பு, நிதிப் பிணைப்பு, டிஜிற்றல் பிணைப்பு, மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான பிணைப்புபோன்ற இன்னோரன்ன பிணைப்புத் திட்டங்கள் தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலர் பேசுகிறார்.

ஏற்கனவே இந்தியா முன்னின்று தொடங்கிய தமிழ் மக்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான பிணைப்புத் திட்டங்கள் அரைகுறையாகத் தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு பின்னணியில்,புதிய பிணைப்புத் திட்டங்களின்மீது இந்தியா கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டதா? இனப்பிரச்சினைக்கான தீர்வின் மீதான இந்தியாவின் கவனக்குவிப்பைத் திசை திருப்ப மேற்படி பிணைப்புத் திட்டங்கள் இலங்கைக்கு உதவுமா?

> **13 ஐ முழுமையாக அமல்படுத்தக் கேட்ட கட்சிகளும், சிவில் சமூகங்களும், சமஸ்டியைக் கேட்ட கட்சிகளும் சிவில் சமூகங்களும் அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகின்றன? இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர்கள் நம்பும் இறுதி இலக்கை நோக்கிப் போராடுவதற்கு அவர்கள் தயாரா? இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐ.நா.வோ, அல்லது தந்தை செல்வா கூறியது போல கடவுளோ, யாராக இருந்தாலும் தமிழ்மக்களுக்குத் தங்கத் தட்டில் தீர்வை வைத்துத் தரப்போவதில்லை. போராடினால்தான் தீர்வு கிடைக்கும்.போராடியபடியால்தான் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு குறைந்தபட்சம் பதின்மூன்றாவது கிடைத்தது.**



# கறுப்பு ஜூலை : 4 தசாப்தங்கள் கடந்த பிறகும்



ராஜன் விவேகா

# இலங்கைக்குள் தமிழர்களுக்கு தீர்வு என்பது கானல் நீரே!!

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை, ஒரு எல்லைக்கோடாக அமைந்த 1983 ஜூலை இனவன்செயல்களுக்கு பிறகு இந்த வாரத்துடன் நான்கு தசாப்தங்கள் உருண்டோடிவிட்டன.

ஒரு வாரத்துக்கு மேலாக தலைவிரித்தாடிய வன்செயல்களின் கொடூரம், அதனால் நேர்ந்த உயிரிழப்புகள், சொத்து அழிவுகளுக்கு அப்பால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வேதனை அதிர்ச்சியும் உளவியல் தாக்கமும் கணிப்பிடமுடியாதவை.

தமிழர் என்ற தேசிய அடையாளத்தை முற்றிலும் துடைத்தழிக்க சிங்களப் பேரினவாத அரசு, நூற்றுக்கணக்கான தமிழர்களைக் கொன்று இனப்படுகொலை செய்தது. காலங்கள் கடந்தாலும் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகள் நம் இரத்தத்தை உறைய வைப்பவை.




ஈழத் தமிழர்களின் வரலாற்றை வாசிப்பவர்கள் கண்ணீரின்றி கடக்க முடியாத நிகழ்வுகளுள் ஒன்று இந்த கறுப்பு ஜூலை கலவரம்.


1983–ம் ஆண்டு ஜூலை மாதம் சிங்களப் பேரினவாத அரசாலும், சிங்களவர்களாலும் தமிழர்களுக்கு நடத்தப்பட்ட கொடூரங்களே ‘கறுப்பு ஜூலை’ என்று குறிப்பிடக் காரணமாக இருக்கிறது.

ஒரு மனிதன் உணர்ச்சி மரத்துப் போய் நிர்வாணமான நிலையில் தலையில் கை வைத்து அமர்ந்திருக்க, சுற்றிலும் இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கும் புகைப்படத்தை காணாதவர்கள் இருக்க முடியாது.

அந்தக் கலவரத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை, சிங்களவர்கள் இரக்கமின்றிக் கொன்று குவித்தார்கள். குடும்பத்துடன் தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

500–க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் ஈவிரக்கமின்றி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.தமிழர்களின் உடைமைகள், வர்த்தக நிலையங்கள், சொத்துகள் தொடர்பான விவரங்கள் ஏற்கனவே சிங்கள அதிகாரிகளால் கலவரக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

அதற்கமைய, வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள், திரையரங்குகள் என 5000–க்கும் மேற்பட்ட தமிழர்களின்



வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து சூறையாடினார்கள். ஆறு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற இந்த தாக்குதலில் பெயரள வுக்கு போடப்பட்ட ஊரடங்கிற்கும், சிங்கள ஆயுதப் படை மறுப்பு தெரிவித்து, கலவரக்காரர்களுடன் இணைந்து கொண்டு தமிழர்க ளைத் தாக்கியது.

தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர்களின் வணிக நிலையங்களும் என கொழும்பு கோர மாய்க் காட்சியளித்தது. 1,50,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உடைமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து ஜூலை 25 ஆம் திகதி கொழும்பின் வெலிக்கடைச் சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளான ரெலோ அமைப்பை சார்ந்த குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், காந்திய அமைப்பைச் சார்ந்த வைத்தியர் ராசசுந்தரம் மற்றும் எஸ்.ஏ டேவிட் உட்பட 37 பேர் சிறை அதிகாரிகளின் ஒத்துழைப் போடு அவர்கள் அளித்த ஆயுதங்களோடு மிகக் கொடூரமாக கொல் லப்பட்டனர்.

அரசு என்னை ஒரு நாள் கொன்று விடும். எனது கண்களை ஈழத் தமிழர்களுக்கு பொருத்தி விடுங்கள். நான் காண இயலாத தமிழ் ஈழத்தை எனது கண்களாவது காணட்டும் என்று குட்டிமணி நீதிமன் றத்தில் கூறியதாகவும் இந்த கண்கள் இருந்தால் தானே ஈழத்தை பார்க்கும் என்று குட்டிமணியின் கண்களைத் தோண்டியெடுத்து, அதனை காலால் மிதித்தார்கள் என கூறப்படுகின்றது

அந்த நாளோடு மட்டும் அந்தக் கொடூரம் முடியவில்லை.மீண்டும் ஜூலை 28 ஆம் திகதி அந்த சிறையில் தாக்குதல் நடத்தப்பட்டது. 18 தமிழர்கள் கொல்லப்பட்டனர். மூன்றே நாட்களில் 55 தமிழ் கைதிகள் இனவெறிக்கு இரையாக்கப்பட்டார்கள்.

இலங்கையில் நடைபெற்ற இந்த கொடூர சம்பவங்களையும், படுகொலைகளையும் சர்வதேசப் பத்திரிக்கைகள் கண்டித்து செய்தி வெளியிட்டன.அதற்கமைய, இங்கிலாந்தின் பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகையானது,

‘ஏனைய ஆசிய நாடுகளின் கலவரங்களிலிருந்து இந்தக் கல வரத்தின் தெளிவான வேறுபாடு, தமிழர்களின் வர்த்தகத் தலங்க ளைத் தேடி கலவரக் கும்பல்கள் கண்டுபிடித்து தாக்கியதே ஆகும். காவலர்களும், அரசப் படைகளும் கலகக்காரர்களுடன் சேர்ந்தே தாக்கினார்கள்’ என எழுதியுள்ளது.

அமெரிக்காவின் பிரபல நாளிதழான வாஷிங்டன் போஸ்ட் ,

‘சேர்ந்து வாழ்வது கடினமானதென்றால் வடக்கில் தமிழர்களுக்கு தனி நாடு கோரும் உரிமை இருக்கவே செய்கிறது’ என எழுதியிருந் தது.மேலும் ஜூலை கலவரத்தை தமிழ் நாட்டின் பத்திரிக்கைகளும், இந்திய ஒன்றியத்தின் முக்கியப் பத்திரிக்கைகளும் இதனை தலைப் புச் செய்திகளாக்கின.

தமிழ் நாட்டிலும், உலகத் தமிழர்களிடையிலும் இந்த ஜூலை கலவரம் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது.கட்சி, அமைப்பு வேறுபாடுகளின்றி தமிழகத்தின் பொதுமக்கள் இலங்கை அரசுக் கெதிரான பேரணி, ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என தங்கள் தமிழீழ உறவுகள் கொன்றொழிக்கப்பட்டதை கண்டித்து ஒன்று திரண்டார்கள். சர்வதேச சமூகமும் கண்டனத்தை தெரிவித்தன.

இந்த ஜூலை கலவரம், பல்லாயிரம் தமிழ் இளைஞர்களை ஆயு தம் தரித்த விடுதலைப் போரில் சேர அடித்தளமானது.தமிழ் நாட்டு தமிழர்கள் இந்தியப் படையை அனுப்பி அமைதியை நிலைநாட்ட கோரிக்கை எழுப்பியதும் ஜூலை கலவரத்தால் உருவானது.


கறுப்பு ஜூலை என்பது ஜூலை மாதத்தில் ஆரம்பித்த நிகழ்வு அல்ல. அது மே மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக நடந்து வருவது. 1983 மே மாதத்தில் அங்கு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் பங்கேற்கக் கூடாது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் கொடுத்த அழைப்பின் பேரில் தமிழர் பகுதியில் 98 சதவீதம் பேர் தேர்தலை முற்றுமுழுதாக புறக்கணித்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் தமிழர் பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் ஜே.ஆர். ஜயவர்தனவை கோபம் அடைய செய்தது.

இதனால் ஜே.ஆர். ஜயவர்தன தனது படைகளை கட்டவிழ்த்து விட, தமிழர் பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்.

வீடுகள் எரிக்கப்பட்டன, சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இந்த பதட்டம் வவுனியா முழுவதும் பரவியது.பின்பு திருகோணமலைப் பகுதிகளிலும் பரவியது. 1983 ஜூலை மாதம் நாள்தோறும் தமிழர்கள் கொல்லப்படுவது வாடிக்கையாகிப் போனது.

1983 ஜூலை 22 வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணக் குடாநாட் டில் திருநெல்வேலியில் விடுதலை புலிகள் நடத்திய கெரில்லாத் தாக்குதலில் 13 இலங்கை இராணுவத்தினர் பலியான சம்பவம் அன் றைய அரசாங்கத்திற்குள் ஆதிக்கம் செலுத்திய சிங்கள இனவாதச் சக்திகள் நாடு பூராவும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்வதற்கு ஏற்கெனவே திட்டமிட்டுவந்த வன்செயல்களை கட்டவிழ்த்துவி டுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாக அதிக எண்ணிக்கையிலான படை யினர் கொல்லப்பட்டது இத்தாக்குதலில் ஆகும். கறுப்பு ஜூலை


தங்கதுரை குட்டிமணி ஜெகன்

ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!

தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட

37 பேர் படுகொலை!

சிறைக்குள் சிங்களவர் வெறியாட்டம்!



வன்செயல்களுக்கு ஒரு வாரம் முன்னதாக லண்டன் ரெலிகிராவ் பத்திரிகைக்கு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அளித்த பேட்டியொன்றில் தெரிவித்த கருத்துக்கள் தமிழர்கள் தொடர்பில் அரசாங்கம் எத்தகைய மனநிலையில் இருந்தது என்பதை தெளிவாக வெளிப்படுத்தியது.

'இப்போது நான் யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்களைப் பற்றி அல்லது அவர்களது உயிர்களைப் பற்றி அல்லது எம்மைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப் பற்றி இப்போது எங்களால் சிந்திக்கமுடியாது.

வடக்கு மீது எந்தளவுக்கு நெருக்குதல்களைப் பிரயோகிக்கின்றோமோ அந்தளவுக்கு சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்' என்று அவர் சொன்னார்.

ஜயவர்தனாவின் அந்த கருத்துக்கள் கறுப்பு ஜூலை வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் படைவீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தினால் சிங்களவர்கள் ஆவேசமடைந்ததால் மாத்திரம் மூண்டதல்ல, இனவாதச்சக்திகள் நீண்ட நாட்களாக தீட்டிவந்த திட்டத்தின் விளைவானது என்பதை அம்பலப்படுத்தியது. அதற்கமைய, உயிரிழந்த இராணுவத்தினரின் உடல்களை யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்ய இராணுவத்தினர் விரும்பிய போதும், அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்களது உடலை கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியில் பார்வைக்கு வைத்து அடக்கம் செய்ய முடிவெடுத்தார்.

ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம், இராணுவத்தினரின் மரணத்தை இனவெறி தூண்டும் நிகழ்வாக மாற்றியது.எந்த இராணுவ வீரர்கள் மறைவிற்கும் கடைபிடிக்காத புதிய முறைகளில் இந்த இராணுவத்தினருக்கு இறுதி ஊர்வலம் நடைபெற்றுள்ளது.

இராணுவ வீரர்களின் சடலங்கள் சவப்பெட்டியில் எடுத்து வரப்படாமல் இன கலவரத்தை தூண்டும் நோக்குடன் பொலித்தீன் பைகளில் கட்டிக் கொண்டுவரப்பட்டன. வீரர்களின் இறுதி ஊர்வலத்தை தாமதப்படுத்தினார்கள்.இந்த தாமதம் பெரும்பாலான சிங்களவர்களை கொழும்பை நோக்கி வரச் செய்வதற்கு போதுமான காலமாக இருந்தது.

குறித்த கலவரம் ஜூலை 23-க்கு பின்னர் உச்சத்தை அடைந்தது.

இதன் பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த பொது கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது.அப்போது கொழும்பிலிருந்து வந்த யாழ். தேவி ரயில் தமிழ் இளைஞர்களால் தீயிடப்பட்டது.

இதனால் ஏற்பட்ட பதற்றத்தினால், யாழ்ப்பாணப் பத்திரிக்கைகளுக்கு தடைவிதிக்கப்பட்டன.அதனைத் தொடர்ந்து படிப்படியாக தென்னிலங்கைக்கும் வன்முறை பரவியது. இதனால் 1,50,000-க்கும் மேற்பட்டோர் தங்கள் உடைமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தார்கள்.

அரச பயங்கரவாதப் படைகளால் திட்டமிடப்பட்டு நிகழ்த்திய படுகொலை என்பதை 'கறுப்பு ஜூலை' வெளிச்சமிட்டு காட்டியது. வன்செயல்கள் மூண்டு கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு பிறகு ஜூலை 28 வியாழக்



கிழமை தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்தனஅந்த வன்செயல்களை தமிழ் அரசியல்வாதிகளின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்கு எதிரான சிங்கள மக்களின் இயல்பான பிரதிபலிப்பு என்று கூறி நியாயப் படுத்தினாரே தவிர, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை.

வன்செயல்களை உடனடியாகக் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மாத்திரமல்ல, படையினரும் பொலிஸாரும் வன்முறைக் கும்பல்களுக்கு அனுசரணையாகவே செயற்பட்டனர்.அரசாங்க அரசியல்வாதிகள் பல அமைச்சர்களும் கூட தங்கள் பகுதிகளில் முன்னணியில் நின்று தமிழர்களுக்கு எதிராக வன்முறைகளை தூண்டிவிட்டார்கள். வன்முறைக் கும்பல்களைக் கலைக்க படையினர் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என்று ஜயவர்தனவிடம் பி.பி.சி. பேட்டியொன்றில் கேட்கப்பட்டபோது,

படையினர் மத்தியில் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் பெருமளவுக்கு இருந்தது என்று நான் நினைக்கிறேன்.கலவரங்களில் ஈடுபட்ட சிங்களவரைச் சுடுவது சிங்கள சமூகத்துக்கு விரோதமான செயலாக இருக்கும் என்று படையினர் உணர்ந்திருக்கக்கூடும்.சில இடங்களில் கலகக்காரர்களை படையினர் உற்சாகப் படுத்தியதையும் கண்டோம் என்று பதிலளித்தார்.

1952 இல் பண்டாரநாயகா இலங்கை ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், சிங்களத்தை அரச மொழியாக்கி, தமிழ் மொழி கீழிறக்கப்பட்டது.

தமிழர்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் 'சிங்களம் மொழி தெரிந்தாக வேண்டும், இல்லையென்றால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு இல்லை' என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அப்பொழுது தமிழர்களை பிரதிநிதித்து வப்படுத்திய சமஷ்டிக் கட்சியான தந்தை செல்வா தலைமையில் இயங்கிய தமிழரசு கட்சி அமைதிவழிப் போராட்டமே நடத்தியது.அதற்கு பலன் அம்பாறை மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை மற்றும் வணிக வளாகங்கள் சூறையாடப் பட்டன.

கொழும்பிலிருந்து 10,000க்கும் மேற்பட்டோர் அகதிகளாகி வடக்கு, கிழக்கு பகுதிக்கு சென்றார்கள்.அப்பொழுதும் தன்னாட்சி கோரிக்கையை வெகு ஜன மக்களிடம் எடுத்துச் செல்ல சமஷ்டிக் கட்சி அறவழியிலேயே போராடியது.

1961 ஆம் ஆண்டிலும் அதே அறவழிப் போராட்டம் தான் நடத்தியது.

அதே ஆண்டு மூன்று மாத காலம் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தால் வடக்கு,



கிழக்கு பகுதியிலுள்ள அரசு நிறுவனங்கள் முடங்கின.சிங்களச் சட்டத்திற்கு புறம்பாக தமிழ் தேசிய அஞ்சல் தலைகள் சமஷ்டிக் கட்சியால் வெளியிட்டது.

இப்படியே அறவழிப் போராட்டங்களும் தமிழர் படுகொலைகளும் தொடர்ந்த வண்ணமிருக்க, தமிழர்களுக்கான அறவழிக் கட்சிகள் தமிழர்களின் அரசியல் சுதந்திரத்தை, தமிழ் தேசிய அடையாளத்தை காப்பாற்ற இணையத் துவங்கின.அவர்களும் இலட்சியத்தின் பாதைகளை விட்டு பாராளுமன்றப் பதவிக்குள் முடங்கி விட்டனர்.

இதற்கிடையில் இலங்கை அரசின் 1967, 1971, 1979-ம் ஆண்டுகளில் கொண்டு வந்த தரப்படுத்துதல் சட்டங்கள் தமிழர்களின் கல்வியில் பேரிடியாய் நுழைந்தது.

அதாவது, அதிக புள்ளிகள் பெற்ற, திறமை வாய்ந்த தமிழ் மாணவர்கள் வாய்ப்புக்களை இழக்க, குறைந்த புள்ளிகள் பெற்ற சிங்கள மாணவர்கள் அந்த வாய்ப்புக்களைப் பெற்றனர்.

வேலை வாய்ப்பின்றி, உயர் படிப்புக்கு வழியுமின்றி விரக்தியும், சலிப்பும் புறச் சூழலாக இளைஞர்களை புரட்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கத் தூண்டியது.'கறுப்பு ஜூலை' நிகழ்வு காலங்கள் கடந்தாலும் தமிழர்களின் மனதில் ஆறாத காயங்களையும், தீராத வலிகளையும் தமிழர்கள் மனதில் கிளறிக் கொண்டேயிருக்கும்.

சிங்களப் பேரினவாத அரசு ஆயிரக்கணக்கான தமிழர்களை அழித்தொழித்த 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலையும், இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த 2009 ஆம் ஆண்டின் மே மாதமும் யாராலும் மறக்கமுடியாது.

நான்கு தசாப்தங்களிலும் 15 இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு குறிப்பாக மேற்கு ஐரோப்பாவுக்கும் வட அமெரிக்காவுக்கும் புலம்பெயர்ந்து நவீன வாழ்க்கை வாழ்கிறார்கள்.

மேற்கு நாடுகளில் உள்ள செல்வாக்கு மிக்க ஆசிய புலம்பெயர் சமூகங்களில் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவினராக இலங்கைத் தமிழர்கள் விளங்குகிறார்கள்.இலங்கையில் வந்து முதலீடுகளைச் செய்து தாய்நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறு அரசாங்கத் தலைவர்கள் கோரிக்கை விடுக்கின்ற அளவுக்கு புலம்பெயர்இலங்கை தமிழர்களில் பலர் பொருளாதார ரீதியில் வலிமை மிக்கவர்களாக இருக்கிறார்கள்.

**"சிங்களப் பேரினவாத அரசு ஆயிரக்கணக்கான தமிழர்களை அழித்தொழித்த 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலையும், இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த 2009 ஆம் ஆண்டின் மே மாதமும் யாராலும் மறக்கமுடியாது"**

இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் முயற்சிகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின், குறிப்பாக மேற்குலக நாடுகளின் கவனத்தை இடையறாது ஈர்க்கும் அரசியல் செயற்பாடுகளிலும் அவர்கள் மத்தியில் உள்ள அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கில் போரின் விளைவான அவலங்களில் இருந்து இன்னமும் முழுமையாக விடுபடமுடியாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடர்பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன.

போரின் முடிவுக்குப் பின்னரும் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவமயத்தை வலுப்படுத்துவதிலேயே அரசாங்கங்கள் அக்கறை காட்டுகின்றன.

தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் அரசாங்க அனுசரணையுடன் திட்டமிட்ட குடியேற்றங்கள் மதவாத சக்திகளின் துணையுடன் தீவிரப்படுத்தப்படுவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

தொல்பொருள் ஆராய்ச்சி, வனப்பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புத் தேவைகள் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் இன்று வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பாரதூரமான உடனடிப் பிரச்சினையாக இருக்கிறது.

கறுப்பு ஜூலைக்கு பிறகு இந்தியாவின் நேரடித் தலையீட்டை அடுத்து 1987 ஜூலை இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கை மாகாணசபைகள் அமைக்கப்படுவதற்கு வழிவகுத்தது.அதற்காக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் 36 வருடங்கள் கடந்தும் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை சகல அரசாங்கங்களுமே உறுதி செய்துகொண்டன. இந்தியாவினால் கூட அது விடயத்தில் இலங்கையை வழிக்கு கொண்டுவர முடியவில்லை.

சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான காலப்பகுதியில் அரசியல் தீர்வை நோக்கிய பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தின் 1991 மங்களமுனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு,சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியில் பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்ட 2000 புதிய அரசியலமைப்புக்கானயோசனைகள், மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில்






2006 பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள் மற்றும் மைத்திரிபால – ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில்புதிய அரசியலமைப்பை வரைவதற்கு முன்னெடுக்கப்பட்ட செயன்முறை ஆகியவையே அவையாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் அரசாங்கங்களுடனான பேச்சுவார்த்தைகளிலும் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பல சந்தர்ப்பங்களிலும் இந்த முயற்சிகளைப் பற்றிதிரும்பத்திரும்ப விளக்கிக் கூறி வந்தார். இறுதியாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் நடத்திவந்த பேச்சு வார்த்தைகளிலும் கூட சம்பந்தன் அவற்றைப் பற்றி பேசினார்.

அண்மைக்காலமாக தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திவந்த பேச்சுவார்த்தைகளிலும் முன்னேற்றத்தைக் காணமுடியாமல் இருக்கிறது.

இலங்கையின் 75 வது சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகக் கூறிக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க கடந்த டிசம்பரிலும் ஜனவரியிலும் இரு தடவைகள் சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் பாராளுமன்ற கட்சிகளின் மாநாட்டை கூட்டினார்.

அந்த முயற்சியை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல்போன நிலையில் இறுதியாக தமிழ்க்கட்சிகளுடன் மாத்திரம் அவர் பேசினார்.13 வது திருத்தத்தை இரு வருடங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனது அரசாங்கம்நடவடிக்கைகளை எடுக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

அரசியலமைப்பில் இருக்கும் அந்த திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதி என்ற வகையில்தனது கடமை என்று அதை எதிர்க்கும் அரசியல் சக்திகளுக்கு கூறிய அவர் ஒன்றில் அந்த திருத்தத்தைமுழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் அல்லது அதை ஒழித்துவிட எவராவது பாராளுமன்றத்தில் புதியதிருத்தச்சட்டம் ஒன்றை தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஆனால், தென்னிலங்கையில் கிளம்பிய எதிர்ப்பையடுத்து பதின்மூன்றைப் பற்றி பேசுவதை அவர் தவிர்த்துக்கொண்டார்.இப்போது இறுதியாக இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக கடந்தவாரம் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அவர் யோசனையை முன்வைத்தார்.

> **“புதுடில்லியில் இந்திய அரசாங்கத்திடமிருந்து 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி விரைவில் மாகாணசபை தேர்தல்களை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தல் வரும்போது தன்னால் அது விடயத்தில் செய்யக்கூடியது என்ன என்பதை அவர்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தும் நோக்குடன்தான் பொலிஸ் இல்லாத 13 பற்றி ஜனாதிபதி கொழும்பில் பேசினார்”**

ஆனால், தமிழ்க்கட்சிகள் அதை திட்டவட்டமாக நிராகரித்துவிட்டன.

இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னதாக அந்த யோசனையை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டதற்கு ஒரு அந்தரங்க நோக்கம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

புதுடில்லியில் இந்திய அரசாங்கத்திடமிருந்து 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி விரைவில் மாகாணசபை தேர்தல்களை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தல் வரும்போது தன்னால் அது விடயத்தில் செய்யக்கூடியது என்ன என்பதை அவர்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தும் நோக்குடன்தான் பொலிஸ் இல்லாத 13 பற்றி ஜனாதிபதி கொழும்பில் பேசினார்.

தமிழ்க்கட்சிகள் அதை நிராகரித்துவிட்ட நிலையில் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளை மீண்டும் எவ்வாறு தொடங்குவது என்பதில் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி தேர்தல் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கும் ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களை வென்றெடுப்பதை விடவும் தென்னிலங்கை தேசியவாத சக்திகளை பகைத்துக்கொள்ளாமல் இருப்பதிலேயே கூடுதல் அக்கறை காட்டக்கூடும்.

பௌத்த அடிப்படைவாத, சிங்களப் பேரினவாத மனப்போக்கு கொண்டவர்கள் ஆளும் வரை இலங்கைக்குள் தமிழர்களுக்கு தீர்வு என்பது கானல் நீரே.






நவீனன்

# கறுப்பு ஜூலையும் வெலிக்கடை சிறைப் படுகொலையும்!

## தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த பாரிய இனப்படுகொலை!!

**நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலைப் படுகொலை ஓர் இனத்திற்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது. சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர் செய்வதற்குரிய எந்த வித நடவடிக்கைகளும் எந்தவொரு அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப் படவில்லை என்பதே உண்மையாகும்.**

கருப்பு ஜூலையின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளது. தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த இனப் படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வதேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை போராடும் இனங்கள் தெளிவாக கற்று அறிய வேண்டும்.

1983, ஜூலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத்துறையால் 100 பேர் வரையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப் படுகொலை, பின்னர் தென்னிலங்கை இனப்படுகொலையாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

1983 கறுப்பு யூலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

### திட்டமிடப்பட்ட இனப்படுகொலை:


கறுப்பு ஜூலை 'இனக்கலவரம்' என்ற போர்வைக்குள் நடைபெற்ற 'இனப்படுகொலை' நிகழ்வாகும்.ஆனால் கறுப்பு யூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறையும் அளவும் அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது. இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை செயற்பாடாகவே ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.














ANTI-TAMIL POGROM — JULY 1983
State pogrom against Tamils
Mass murder in Sri Lanka
Beirut echoes for the Tamils in torment
Anti-Tamil riots claim more dead
33 killed in fresh Colombo violence
Army on rampage in Lanka, over 300 gunned down
SECOND SLAUGHTER OF TAMILS IN COLOMBO JAIL
Britons flee as army goes berserk
Britons tell of holiday terror in Sri Lanka
BRITISH TAMILS MOURN
Who will help the Tamils?
Colombo acts to appease mobs
Colombo rioting wrecks 20,000 Tamil businesses
TRAIL OF DEATH SPREADS
Tragic cargo aboard 'Train of Tears'
Tamil homes in Colombo set on fire
37 die in Colombo prison attack
Army 'took part in killings'
17 more inmates killed in Walikada jail
TORTURE OF TAMILS
Sri Lanka: Island of terror
Troops killed many in Jaffna much before riots
Racism in Sri Lanka
BLOOD IN THE STREETS
Sri Lanka forces Red Cross men to leave
37 TAMIL PRISONERS MASSACRED IN JAIL
Tormenting the Tamils

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டம் தோற்றுப் போக, தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கருப்பு ஜூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே.

ஏற்கனவே திட்டமிட்டப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்துவிட்டது. உண்மையில் இக்கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

## சிங்களப் பேரினவாத தரப்படுத்தல்:

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதாரரீதியாகவும், நில உரிமை ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியாகவும் நசுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவற்றுக்கெதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்பசொற்ப சலுகைகளுக்காக அடங்கிப்போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட 'தரப்படுத்தல் என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல் தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.

தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப்பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராததொன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

## கருப்பு ஜூலையில் வெலிக்கடை சிறைப்படுகொலை:

ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும்.






இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இன்று வரையில் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக ஜூலை 28ம் திகதி மீண்டும் இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக்கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாக தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.

இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.

காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர்.

சிங்கள இன வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்திற்கு முதல்நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து ‘சில்’ அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைககளும் எந்த ஒரு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படவில்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த இனப் படுகொலை ஓர் இனத்திற்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே இலங்கைத் தமிழ் மக்களால் கருதப்படுகிறது.






“இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது”



# குட்டிமணியின் கண்கள்

> எனது மரணதண்டனையை நிறைவேற்ற முன் எனது கண்களை எடுத்து, பார்வையற்ற ஒருவருக்குப் பொருத்துங்கள். நான் பார்க்க முடியாத தமிழீழத்தை என் கண்களாவது பார்க்கட்டும்.
>
> **- குட்டிமணி**



விடுதலை விலைமதிப்பற்றது. நாளை மலரப் போகும் தமிழீழத்திற்காக ஆயிரமாயிரம் வீரர்களும் வீராங்கனைகளும் தங்கள் இன்னுயிர்களை விடுதலை வேள்விக்கு காணிக்கையாக்கிக் கொண்டார்கள். தனது எதிர்காலத் தலைமுறை எந்த வித அடக்குமுறைகளும் அற்று உரிமையுடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதற்காக தன்னை அழித்துக் கொண்டவர்தான் குட்டிமணி என்று அழைக்கப்படும் திரு செல்வராசா யோகச்சந்திரன்.

ஈழத் தமிழர்களின் இன்னல்கள் நிரந்தரமாகக் களையப்பட வேண்டுமென்றால் தனித் தமிழீழம்தான் நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் மிக உறுதியாக இருந்தவர் குட்டிமணி. அந்த விடுதலை வீரரை 08-05 1981 அன்று சிங்களக் காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். சிங்கள நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. தீர்ப்பளித்த நீதிபதி குட்டிமணியின் இறுதி ஆசையைக் கேட்டபோது, அதற்கு குட்டிமணி கூறிய பதில் அவரது உள்ளக் கிடக்கையையும் விடுதலை மேல் அவர் கொண்டிருந்த தீராத பற்றையும் உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

எனது மரணதண்டனையை நிறைவேற்ற முன் எனது கண்களை எடுத்து, பார்வையற்ற ஒருவருக்குப் பொருத்துங்கள். நான் பார்க்க முடியாத தமிழீழத்தை என் கண்களாவது பார்க்கட்டும்.

இதுதான் அந்த விடுதலை வீரரின் கடைசி ஆசை. அதற்குப் பின் அவர் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப் பட்டார். அந்தச் சிறையில் ஏற்கனவே பல சிங்களக் கைதிகளும் தமிழ்க் கைதிகளும் இருந்தனர். சிங்களக் கைதிகள் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்காக சிறை வைக்கப்பட்டிருந்தனர். தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக சிறை வைக்கப் பட்டிருந்தனர். இன மோதல்களை தவிர்ப்பதற்காக தமிழ்க் கைதிகளும் சிங்களக் கைதிகளும் வெவ்வேறு சிறைகளில் அடைத்து



வைக்கப் பட்டிருந்தனர். குட்டிமணி 34 தமிழ்க் கைதிகளுடன் அடைத்து வைக்கப் பட்டிருந்தார். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மிகப் பெரிய இனக் கலவரம் மூண்டது. யூலை மாதம் 24 ஆம் திகதி தொடங்கிய அந்தக் கலவரம் பல வாரங்கள் தொடர்ந்தது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். பலர் உயிரோடு கொழுத்தப் பட்டனர். தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப் பட்டன. அப்போது ஆளுங்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P.) கலவரத்தை அடக்காமல் கை கட்டி வேடிக்கை பார்த்ததுமில்லாமல் கலவரத்தை மேலும் தூண்டும் வேலைகளிலும் இறங்கியது.

இந்தக் கலவரத்தின் தீ வெலிக் கடைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிங்களக் கைதிகளையும் பற்றிக் கொண்டது. சிறைக் காப்பாளர்கள் அந்தச் சிங்களக் கைதிகளின் இனவெறிக்கு தீனி போடும் வகையில் தமிழ்க் கைதிகள் அடைத்து வைக்கப் பட்டிருந்த சிறைக் கதவுகளைத் திறந்து விட்டனர். கத்தி, வாள் மற்றும் பல கூரிய ஆயதங்களுடன் தமிழ்க் கைதிகளின் அறைகளுக்குள் நுழைந்து அவர்களை வெட்டி வீழ்த்தினர். குட்டிமணியின் கடைசி ஆசையை ஏற்கனவே கேள்விப் பட்டிருந்த அந்தச் சிங்களக் கைதிகள் அவரை வெட்டிப் படுகொலை செய்தது மட்டுமல்ல அவரது கண்களைத் தோண்டி எடுத்து அதை தங்களது கால்களால் நசுக்கி அழித்தனர். குட்டிமணியோடு சேர்த்து படுகொலை செய்யப் பட்ட 35 தமிழ்க் கைதிகளின் உடல்களை வெளியில் எடுத்துச் சென்று சிறைச் சாலை முற்றத்தில் இருந்த புத்தர் சிலைக்கு முன்னால் போட்டு விட்டு ஆனந்தக் கூத்தாடினர்.

குட்டிமணி மட்டுமல்ல அவரது கண்கள் கூட தமிழீழத்தைப் பார்த்து விடக்கூடாது என்பதில் வெறியாக இருந்தனர் அந்தச் சிங்களக் கைதிகள். அந்த விடுதலை வீரரின் இறுதி ஆசையை நிறைவேறாமல் செய்தனர். குட்டிமணி மட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான பெண்களும் ஆண்களும் தங்கள் உயிரினும் மேலாக நேசித்த அந்தத் தமிழீழத் தனியரசைக் காணும் முன்பே போர்க்களத்தில் தங்கள் உயிர்களைக் காணிக்கையாக்கிக் கொண்டனர். இவர்கள் எதைக் கேட்டார்கள்? உரிமைகள் மறுக்கப்பட்ட தங்கள் இனத்துக்காக விலங்கிலும் கேவலமாக நடத்தப்பட்ட தங்கள் மக்களுக்காக நீதியையும் நியாயத்தையும் அமைதியையும் விடுதலையையும் கேட்டார்கள்.

(செப்டம்பர் திங்கள் 1997 ஆம் ஆண்டு, "Tamil Tribune' எனும் இதழில் பேராசிரியர் தஞ்சை நலங்கிள்ளி அவர்கள் எழுதிய "Eyes Of Kuttimani' என்ற ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம் இது.)

**வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் விவரம் பின்வருமாறு;**

★ தங்கதுரை என்று அழைக்கப்படும் நடராசா தங்கவேல்
★ குட்டிமணி என்று அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன்
★ ஜெகன் என்று அழைக்கப்படும் கணேஷானந்தன் ஜெகநாதன்
★ தேவன் என்று அழைக்கப்படும் செல்லதுரை சிவசுப்பிரமணியம்
★ சிவபாதம் மாஸ்டர் என்று அழைக்கப்படும் நவரத்தினம் சிவபாதம்
★ செனட்டர் என்று அழைக்கப்படும் வைத்திலிங்கம் நடேசுதாசன்
★ அருமைநாயகம் என்றும் சின்னராஜா என்றும் அழைக்கப்படும்செல்லதுரை ஜெயரெத்தினம்
★ அன்ரன் என்று அழைக்கப்படும் சிவநாயகம் அன்பழகன்
★ ராசன் என்று அழைக்கப்படும் அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம்
★ சுரேஷ் மாஸ்டர் என்று அழைக்கப்படும் காசிப்பிள்ளை சுரேஷ்குமார்
★ சின்னதுரை அருந்தவராசா
★ தேவன் என்றும் அரபாத் என்றும் அழைக்கப்படும் தனபாலசிங்கம் தேவகுமார்
★ மயில்வாகனம் சின்னையா
★ சித்திரவேல் சிவானந்தராஜா
★ கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
★ தம்பு கந்தையா
★ சின்னப்பு உதயசீலன்
★ கணேஷ் என்றும் கணேஷ்வரன் என்றும் அழைக்கப்படும் கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன்
★ கிருஷ்ணபிள்ளை நாகராஜா
★ கணேஷ் என்று அழைக்கப்படும் கணபதி கணேசலிங்கம்
★ அம்பலம் சுதாகரன்
★ இராமலிங்கம் பாலச்சந்திரன்
★ பசுபதி மகேந்திரன்
★ கண்ணன் என்று அழைக்கப்படும் காசிநாதன் தில்லைநாதன்
★ குலம் என்று அழைக்கப்படும் செல்லப்பா குலராஜசேகரம்
★ மோகன் என்று அழைக்கப்படும் குமாரசாமி உதயகுமார்
★ ராஜன் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகுமார்
★ ராஜன் கோதண்டபிள்ளை தவராஜலிங்கம்
★ கொழும்பான் என்று அழைக்கப்படும் கருப்பையா கிருஷ்ணகுமார்
★ யோகன் என்று அழைக்கப்படும் ராஜயோகநாதன்
★ அமுதன் என்றும் அவுடா என்றும் அழைக்கப்படும் ஞானசேகரன் அமிர்தலிங்கம்
★ அந்தோணிப்பிள்ளை உதயகுமார்
★ அழகராசா ராஜன்
★ வேலுப்பிள்ளை சந்திரகுமார்
★ சாந்தன் என்று அழைக்கப்படும் சிற்றம்பலம் சாந்தகுமார் ஆகிய 35 தமிழர்களும் .

**இரண்டாம் நாள் படுகொலை செய்யப்பட்டோர் விவரம் வருமாறு;**

★ தெய்வநாயகம் பாஸ்கரன்
★ பொன்னம்பலம் தேவகுமார்
★ பொன்னையா துரைராசா
★ குத்துக்குமார் ஸ்ரீகுமார்
★ அமிர்தநாயகம் பிலிப்குமாரகுலசிங்கம்
★ செல்லச்சாமி குமார்
★ கந்தசாமி சர்வேஸ்வரன்
★ அரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
★ சிவபாலம் நீதிராஜா
★ ஞானமுத்து நவரத்தின சிங்கம்
★ கந்தையா ராஜேந்திரம்
★ டாக்டர் ராஜசுந்தரம்
★ சோமசுந்தரம் மனோரஞ்சன்
★ ஆறுமுகம் சேயோன்
★ தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன்
★ சின்னதம்பி சிவசுப்பிரமணியம்
★ செல்லப்பா இராஜரட்னம்
★ குமாரசாமி கணேசலிங்கன்

இனவெறி சிங்கள ஆதிக்க சக்தியின் இன அழிப்பு கோரவதாண்டவத்தில் படுகொலையான இவ் உறவுகளுக்கு எம் இதய அஞ்சலிகள்.

-பிரதி பதிவு

# வட, கிழக்கு தமிழர் தாயகமெனின்

# கிழக்கு மக்களையும் முழுமையாக இணைத்து பயணிக்க வேண்டும்




**யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டப்பீடத்தின் தலைவர் கோசலை ஆற்றிய உரையின் சுருக்கம்**

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது தான் மாகாண சபை முறைமை. மாகாண சபையைத தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை தெற்கில் எழுந்துள்ள நிலையில், தேர்தல்கள் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படுகின்றன.

தமிழ் தரப்பிலிருந்து பல்வேறு வகையான தீர்வுகளை முன்வைத்தும் தோற்றதன் பின்னரே இந்தியாவின் அழுத்தத்தால் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது.

1972 மற்றும் 1978 ம் ஆண்டு அரசியல் யாப்பு உருவாக்கத்தின் போது தமிழர்கள் சமஷ்டியை முன்வைத்த போதும் இரு யாப்புகளிலும் ஒற்றையாட்சி என தெளிவாக முன்வைக்கப்பட்டிருந்தது.ஆனால் சமஷ்டி என்பதை உள்ளடக்கி இலங்கையில் அரசியலமைப்பு உருவாக வாய்ப்பில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் தமிழர்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக கட்டியெழுப்புவதற்கு எமக்கு முன்னால் உள்ள தீர்வு மாகாண சபையாக காணப்படுகின்றது.

மாகாணசபை உருவாக்கப்பட்ட போது இது ஒற்றையாட்சிக்கு எதிரானதென உயர் நீதிமன்றத்திலே வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டபோது மாகாண சபை துணைநிலை அமைப்புக்கள் தான் என நீதிமன்றம் தெளிவாக தீர்ப்பளித்தது. இதனிடையே விவசாயம் , கல்வி போன்றவற்றிற்காக மாகாண சபை மூலம் சட்டமாக்கல் இயலுமை உள்ளது.

நியதிச் சட்டங்களை உருவாக்க முடியுமாக இருப்பினும் ஆளுநர்களின் ஒப்புதல்களின்றி பல இடங்களில் சட்டமாக்க முடியாத நிலையுள்ளது.

மாகாண சபை நிலைமைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்டமாக்க முடிந்தாலும் மாகாண சபையுடன் கலந்தாலோசித்த பின்னரே சட்டமாக்க முடியும்.

நியதிச் சட்டங்களை ஆளுநர் மறுக்கும் தருணம் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் 13 ம் திருத்தச் சட்டத்திலுள்ளது.

முழுமையான காணி , பொலிஸ் அதிகாரம் மாகாணசபைக்கு காணப்படாவிட்டாலும் குறிப்பிட்ட அளவு மாகாண பொலிசை அமைக்கும் அளவிற்கு அதிகாரமுள்ளது.



**மாகாண சபை நிலைமைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்டமாக்க முடிந்தாலும் மாகாண சபையுடன் கலந்தாலோசித்த பின்னரே சட்டமாக்க முடியும். நியதிச் சட்டங்களை ஆளுநர் மறுக்கும் தருணம் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் 13 ம் திருத்தச்சட்டத்திலுள்ளது. முழுமையான காணி , பொலிஸ் அதிகாரம் மாகாணசபைக்கு காணப்படாவிட்டாலும் குறிப்பிட்ட அளவு மாகாண பொலிசை அமைக்கும் அளவிற்கு அதிகாரமுள்ளது.**

மாகாணங்களிலுள்ள சிறிய குழப்பங்களை சீர்ப்படுத்தும் அதிகாரம் மாகாணப் பொலிஸிற்குள்ளது.

மாகாண சபையின் தேவைப்பாட்டுக்கு மாகாண சபைக்குள்ள அரச காணி உள்ள போது அதை பயன்படுத்த முடியுமான இயலுமையுள்ளது.

நாங்கள் பல விதத்தில் பலராலும் பாரபட்சப்படுத்தப்பட்ட சமூகம். ஒரு சுயாட்சிக்கான தனியாட்சிக்கான அதிகாரம் கொண்டவர்களாக எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும்.

மாகாண சபைச் சட்டத்தை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் நிர்வாகத் திறனை அதிகரிக்க முடியும். இதனை பயன்படுத்தி எமது பிரச்சினைக்குரிய அதியுச்ச தீர்வை நோக்கி பயணிக்க முடியும்.

எமக்கான தீர்வை எவ்வாறு அடையப் போகின்றோம் , சிங்கள மக்களுக்கு எவ்வாறு இதை தெளிவுபடுத்தப் போகின்றோம் என்பதை வகுக்க வேண்டும்.

வடக்கும்,கிழக்கும் சட்டரீதியாக இணைக்கும் வாய்ப்பு காணப்படுகையில் வடக்கு கிழக்கு மக்கள் விரும்புதல் வேண்டும்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகமெனின் கிழக்கு மக்களையும் முழுமையாக இணைத்து பயணிக்க வேண்டும்.

தற்போதுள்ள முறைகளை சரியாக பயன்படுத்தாவிடின் எதிர்வருங் காலங்களில் மேலதிக அதிகாரங்கள் கைகளுக்கு வழங்காத நிலை ஏற்படும்.

எனவே 13 ம் திருத்தச்சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்தி எதிர்காலத் தீர்வுத் திட்டத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என்றும் கோசலை அவர்கள் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்!!

பெண்!
எத்தனை வலிகளையும்
பொறுப்பாள்
மறைப்பாள்
வெளியே சிரிப்பாள்
வாழும் தேவதையவள்!!

வாழ்க்கையில்
பல்வேறு கட்டங்களில்
பல்வேறு பாத்திரங்களில்
பரிணமிப்பவள்!

தன் குடும்பத்துக்காய்
மாதத்தில்
மூன்று நாட்கள்
வலி பொறுத்து
ஓய்வின்றி
உழைத்திடும் உத்தமியவள்!

குடும்ப வம்சம்
நிலைப்பதற்காக
பத்து திங்கள்
மகவினை சுமந்து
தன் உயிரை
பணயம் வைத்து
உயிர் கொடுக்கும்
சிற்பியவள்!!
தனக்காக வாழாமல்
தன்குடும்பத்திற்காக
தனையுருக்கி ஒளிதரும்
மெழுகுவர்த்தி பெண்!!

குடும்ப நலனுக்காக
தன் ஆசைகளை அடக்கி,
உழைத்திட செல்லும்
இடங்களில் எல்லாம்
சமுதாய சீண்டல்கள்.
எதிர்கொண்டு
அவற்றினை தாண்டி
வீறுநடைபோடும்
வீரப் பிறப்புகள் பெண்கள்!!
பெண்ணுக்கு பல அவதாரம்!
உங்கள் வீட்டிலும்
அவதாரங்கள் உண்டு.
எனவே,
ஒவ்வொரு பெண் வடிவிலும்
தன் உறவை
காணும் எவராலும்
அவளை வன் கொடுமை
செய்ய இயலாது!!
பெண்ணை மதியுங்கள்!!
மனித நேயத்துடன் வாழுங்கள்!!

அம்மு

# ‘விமானங்கள் மீண்டும் வரும்’ படைத்த நெல்லை க.பேரன்!

“ஈழத்து இலக்கியப் படைப்புக்களில் முத்திரை பதித்த விமானங்கள் மீண்டும் வரும் நாவலைப் படைத்த நெல்லை க.பேரன், முழுக் குடும்பத்தோடு மீண்டு வராத துயரமிகு கோரம் ஜூலை 15, 1991 இல் நிகழ்ந்தது. நெல்லை க.பேரன் நினைவாக இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது”



ஐங்கரன் விக்னேஸ்வரா

கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு காதல் கதைகளை மாத்திரம் எழுதிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்காத விடயம். நான் அன்றாடம் காணும் பொது மக்களையும் அவர்களது சமகாலப் பிரச்சினைகளையும் வாழ்க்கை முறைகளையும் எனது சக்திக்கு உட்பட்டவரை எனது படைப்புக்கள் மூலம் தெரிவிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என ‘விமானங்கள் மீண்டும் வரும்’ எனும் நாவலைப் படைத்த நெல்லை க.பேரன் தன்முன்னுரையில் எழுதியுள்ளார்.

**ஒரு எழுத்தாளர் குடும்பமே ஒன்றாகப்படுகொலை:**

ஈழத்தில் ஒரு எழுத்தாளர் குடும்பமே ஒன்றாகப் படுகொலை செய்யப்பட்டது என்ற அழியா வடு கொண்டது எழுத்தாளர் நெல்லை க.பேரனின் வாழ்க்கையில் தான். வடமராட்சில் ஜூலை 15, 1991 இல் இக் கோரம் நிகழ்ந்தது. எழுத்தாளரும், பத்திரிகையாளருமான நெல்லை க.பேரன், அவரின் மனைவி உமாதேவி, மகன் உமா சங்கர், மகள் சர்மிளா என்று அந்த ஒட்டுமொத்தக் குடும்பமே ஜூலை 15 இரவில் இலங்கை இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

சுவையாகவும், இயல்பாகவும், அனாயாசமாகவும் கதை கூறும் நெல்லை க.பேரனது ஆற்றல் குறுநாவலெங்கும் இழையோடுகின்றது. இதற்கோர் எடுத்துக் காட்டு, விமானங்கள் மீண்டும் வரும் நாவலாகும் என அறிமுக விமர்சனத்தில் செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மத்திய கிழக்கு அனுபவங்கள் உண்மை அனுபவங்களாக, அதுவும் சொந்த அனுபவங்களாகவும் வெளிப்படும் ஈழத்தின் முதற் குறுநாவலென்ற சிறப்பையும் இது பெற்றுவிடுன்றது எனலாம் என செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார்.




ஈழத்து எழுத்தாளர் நெல்லை க. பேரன் யாழ்ப்பாணம் நெல்லியடியில் கந்தசாமி, பறுபதம் ஆகியோருக்கு 18 டிசம்பர் 1946இல் பிறந்தவர். செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதினம், கவிதை, நேர்காணல்கள் எனப் பலவும் எழுதியவர்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிலையம், சட்டக் கல்வி நிலையம் ஆகியவற்றில் கல்வி கற்றவர்.

ஆரம்பத்தில் நெல்லை க.பேரன் 1960களின் தொடக்கத்தில் வீரகேசரியில் யாழ்ப்பாண செய்தியாளராக இருந்தார். பின்னர் 1966 இல் அஞ்சல் திணைக்களத்தில் எழுத்தராகப் பணியாற்றத் தொடங்கினார். குவைத் நாட்டில் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.



இவரது சிறுகதைகள் 'ஒரு பட்டதாரி நெசவுக் குப் போகிறாள்' மற்றும் 'சத்தியங்கள்' ஆகியன தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. 'விமானங் கள் மீண்டும் வரும்' என்ற குறுநாவல் இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட் டியில் முதல் பரிசு பெற்று ஈழநாடு பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. பின்னர் 1986 இல் நூலாக வெளிவந்தது.

### விமானங்கள் மீண்டும் வரும்:

ஈழநாடு நிறுவனமும்,யாழ் இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்திய இரசிகமணி கனகசெந்தி நாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் விமா னங்கள் மீண்டும் வரும் குறுநாவலுக்கு முதலா வது பரிசும் கிடைத்து. ஈழநாடு வார மலரிலும் இந் நாவல் தொடர்ந்து பிரசுரமானது.

ஈழநாடு பத்திரிகையில் இக்கதை தொடராக வந்து கொண்டிருந்த போது தன்னை நேரில் கண்டு பாராட்டி, கடிதங்களை எழுதி உற்சாகப்ப டுத்தியும், குவைத்தில் தன்னோடு வாழ்ந்த தனது எழுத்துக்களை அறிந்து கொண்ட பல நண்பர்கள் அனுபவங்களை வைத்து கதை எழுதுங்கள் என்று கேட்டதற்கு இணங்க விமானங்கள் மீண் டும் வரும் நாவல்களைப் போல வேறு படைப்பு களையும் தான் எழுத நினைப்பதாக நெல்லை க. பேரன் கூறியுள்ளார்.

தமிழ் இளைஞர்களின் மத்திய கிழக்கு வாழ்க் கையைப் படம் படித்துக் காட்டும் ரீதியில் தமிழ் மொழியில் வெளிவந்த முதலாவது நாவல் இதுதான் என்று பலர் எனக்குச் சொல்லி இருக் கிறார்கள். இதுபோலவே வேறு நாடுகளில் வாழக் கூடிய தமிழ் எழுத்தாளர்களும் நிச்சயமாகத் தம்


முடக்காட்டில் ஷெல் வீச்சு
எழுத்தாளர் நெல்லை. க. பேரன் உட்பட நால்வர் பலி
(வரணெட்டி)
நெல்லியடியில் உள்ள முடக் காடு எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எறி கணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால் வர் உயிர் இழந்துள்ளனர்.
நேற்று முன் தினம் இரவு 11 45 மணியளவில் பலாலி யில் இருந்து வீசப்பட்ட எறி கணைகள் முடக்காடு எனுமி டத்தில் அடுத்தடுத்து வீழ்ந் தன. அப்பொழுது வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பேரின் பநாயகம் நெல்லை க. பேரன் (வயது 45), உமாவதி பேரின்ப நாயகம் (வயது 36), பே. சர் மிளா (வயது 7) பே. உமா சங் கர் (வயது 15) ஆகியோர் உயிர் இழந்தனர்.
இதே வேளை மரணமானவ ரின் தாய், சகோதரி, மருமகள் ஆகியோர் பதுங்கு குழியினுள் பதுங்கிக் கொண்டதனால் எவ்
(4 ஆம் பக்கம் பார்க்க)
தென்மராட்சியில் ஷெல் தாக்கி
பல்கலை. விரிவுரையாளர் உட்பட இருவர் பலி
(சாவகச்சேரி)

அனுபவங்களை எழுத வேண்டும் என்பது என் விருப்பமாகும் என விமானங்கள் மீண்டும் வரும் நூலின் முன்னுரையில் நெல்லை க. பேரன் எழுதியுள்ளார்.

குவைத்தில் தான் வாழ்ந்த காலத் தில் பல புதிய அனுபவங்கள் ஏற் பட்டன. தனது சொந்த அனுபவங் ளையும் தொகுத்து நாவல் வடிவில் வெளிக்கொண்டு வரவேண்டும் என் பது தனது நீண்ட நாள் ஆசையாகும் எனக்கூறும் அவர், விமானங்கள் மீண்டும் வரும் நாவல் எல்லாவற் றையும் விட இன்னொரு காரணத்திற் காக நெல்லை க.பேரன் பாராட்டுக்கு ரியவராகின்றார்.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர் என்று பாடியவன் பாரதி. இன்று மத்திய கிழக்கு செல்பவர் பலராயிருந்தாலும் கலைச்செல்வம் – கதைச் செல்வம் அளிப்பவர் எத்தனை பேர்? அவ்விதத்தில் ஒரு குறுநாவல் செல்வத்தை இவர் தந்துள்ளார் என்ப தற்காகவும் பாராட்டுக்குரியவரன்றோ என விமர்சன உரையில் செ.யோக ராசா குறிப்பிட்டுள்ளார்.



பெரிய மீன் சின்னமீனை விழுங் குகின்றது. மனிதன் மனிதனை விழுங்குகின்றான். நல்ல மனங் களை நோகச் செய்யும் பான்மையும் விட்டுக் கொடுப்புக்கள் இல்லாமல் சமூக அநீதிகளுக்கு உரமூட்டும் செய்கைகளும் மலிந்து சமுதாயம் நலிவடைந்து செல்கின்றது.

குவைத்தில் தான் வாழ்ந்த காலத் தில் பல புதிய அனுபவங்கள் ஏற் பட்டன. தனது சொந்த அனுபவங் ளையும் தொகுத்து நாவல் வடிவில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசை என தெரி வித்த நெல்லை க. பேரன், முழுக் குடும்பத்தோடு துயரமிகு கோரமாக, அந்த ஒட்டுமொத்தக் குடும்பமே 1991 ஜூலை 15 இரவில் இலங்கை இரா ணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

### நெல்லை க. பேரன் எழுதிய நூல்கள்:

நெல்லை க. பேரன் எழுதிய நூல் களாவன: ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் [சிறுகதைகள், 1975], விமானங்கள் மீண்டும் வரும் [புதி னம்], வளைவுகளும் நேர்கோடு களும் [புதினம், 1978], சத்தியங்கள் [சிறுகதைகள், 1987], பேரனின் கவிதைகள், சந்திப்பு [நேர்காணல் கள், 1986].

ஈழத்து இலக்கிய படைப்புக்க ளில் முத்திரை பதித்த விமானங்கள் மீண்டும் வரும் நாவலை படைத்த நெல்லை க. பேரன், முழுக் குடும்பத் தோடு மீண்டு வராத துயரமிகு கோரம் ஜூலை 15, 1991இல் நிகழ்ந்தது.

# கடவுளே..!! கடைசிப் பலி நானாக...

குளவிகளுக்கு இரையாகும்
மலையகத்தின் மாந்தருக்கு
சமர்ப்பணம் இக்கவிதை....

மரங்களின் இடுக்கில்
மறைந்து கிடக்கும்
மரண தூதுவனே....
நீ காவு கேட்பதற்கு
ஏவி விடப்பட்டவர்கள்
நாமல்ல...

சற்று நில்!
சரித்திரம் அறிந்து கொள்...!!
மலையகத்தின்
அவல நிலை தெரிந்துகொள்.!!

அடுப்பெரிக்கும் குச்சி போல
அனுதினம் வெந்து நின்னோ....
அட்டை கடி கடிக்கையில
இருக்கு இரத்தமு இழந்து நின்னோ....

கல்லு முள்ளு குத்தினாலு
காடு மேடு ஏறி வாரோ...
கம்பி கட்டுன செருப்புலதா
கன தூரோ நடந்து வாரோ...

கொட கம்பி அறுந்த போது
கொட்டு மழ துரத்தும் எம்ம
கூட முழுசா நெறஞ்ச போதும்
காசு கைய கடிக்கு எம்ம..

வெல வாசி ஏத்தத்துல
வெறு வயிரா காஞ்சி போறோ..
தேக் கொழுந்து ஆத்தாவத்தா
மல போல நம்பி வாரோ...

அப்பப்போ ஆச வரு
அறுசுவையா உணவுண்ண
ஆண்டி இவ பட்ட கடன்
அத எங்க பண்ண விடு...



**மாலினி**
கொட்டகலை
(இலங்கை)

கன்னி பொண்ண அனுப்பிடுனு
கடங்காரே பேச்சு சத்தோ..
கண்ண மூடு நேரமெல்லா
கருவரையே கலங்கி நிக்கு...

ஒட்ட வீட்ட சரி செய்ய
ஓட்டு போட்டு காத்திருந்தோ...
ஒரு பயபுள்ள பார்வ இன்றி
பல நாளா நனஞ்சிருக்கோ...

படுத்தெழும்பு பாய்க்குத்தான்
ஏ எலும்பு கூட்டின் நெற தெரியு..
பச்ச தண்ணி பானைக்குத்தா
ஏ வயிற்று பசி அது புரியு...

வக்கீலாக எம் புள்ள
வரத்தானே ஆசப்பட்டே.!
வருமானோ பத்தலனு
அவே கனவ நா தொலச்சே..!

வயசான எம் பொண்ண
கர சேர்க்க காத்திருந்தே!
கட்டி வச்சி பார்க்குமுன்னே
முட்டி உடைக்க வச்சதென்ன...!!

என் கட்டுக்காவல் மீறிடுமோ
கலங்கமது நேர்ந்திடுமோ..
கடித்து போன உனக்கு தான்
கருணை அது இல்லையோ...!!

கத்தி கதறுகிறேன்
கடவுளை! காப்பாத்து என் சனத்த
குளவி பசிக்கு இரையான
கடைசி பலி நானாக...



# அப்பாவித் தமிழர்க்கு எதிரான போரில் இஸ்ரேலின் பங்களிப்பு:

**ஐங்கரன்**



## ஐ.நா. சபை மூலம் விசாரிக்க வேண்டி கோரிக்கை

> சிறிலங்காவில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் இஸ்ரேலிய ஆயுதங்கள் குறிப்பிடத்தக்க அளவையும் தாண்டி பாரிய பங்கைக் கொண்டிருந்தன என மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன

இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் YeshGvulமற்றும் ToratTzedek (Israeli human rights organisations Combatant for Peace) ஆகிய செயற்பாட்டாளர்கள் திரட்டிய சான்றுகள், இலங்கையில் நடந்த அட்டூழியங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை தெளிவாக வெளிப்படுத்தி உள்ளனர்.

### சிறிலங்காவின் போர்க் குற்றங்கள்:

சிறிலங்காவின் போர்க் குற்றங்களுக்கு இஸ்ரேல் உடந்தையாக இருந்தது பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மூலம் இந்த மனித உரிமை அமைப்புகள் தற்போது கோரியுள்ளன.




சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் போது, இஸ்ரேல் ஆயுதங்களை விற்று, இலங்கை இராணுவம் கடுமையான அட்டூழியங்களைச் செய்யும் போது அதற்கு ஆதரவாக இருந்தது என தற்போது பல குற்றச்சாட்டுக்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் மனித உரிமை அமைப்புகள் தற்போது எழுப்பியுள்ளன.

சிறிலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 30 ஆண்டுகால மோதலால் அழிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிகளில் அமைதியின் சாயல் அரிதாக திரும்பியிருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பதே உண்மை.

பல ஆண்டுகளாக, ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் போரின் போது நடந்த போர்க்குற்றங்களை சிரத்தையுடன் ஆவணப்படுத்தியுள்ளன. அரசாங்கப் படைகளால் நடத்தப்பட்ட அட்டூழியங்கள் மீது ஐநாவின்கவனம் முக்கியமாக இருந்தது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான நாடுகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்களுக்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப் படவில்லை.

அதிக கவனம் செலுத்தப்படாத விடயங்களில், அதில் இஸ்ரேலின் போருக்கான உடந்தையும் ஒன்று. 2000களில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பத்தை கணிசமான அளவில் கொள்வனவு செய்து, ஆசியாவில் இஸ்ரேலின் மிக முக்கியமான வாடிக்கையாளர்களில் ஒன்றாக இலங்கை ஆனது. அத்துடன் போரில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்கும் இஸ்ரேலியர்கள் பல ஆண்டுகளாக பயிற்சி அளித்தனர். இந்தக் குற்றங்களில் இஸ்ரேலின் உடந்தையை அம்பலப்படுத்தவும், வழக்குத் தொடரவும் தாங்கள் விரும்புவதாக இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் YeshGvul மற்றும் Torat-Tzedek ஆகிய செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆளில்லா UAV விமானங்கள் :

இலங்கை வானில் இஸ்ரேலிய ஆளில்லா UAV விமானங்கள் பல பயன்படுத்தப்பட்டன.1970 களின் நடுப்பகுதியில், வியட்நாம் போரில் அமெரிக்கா முன்னர் பயன்படுத்திய பழமையான கண்காணிப்பு ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAVs) இஸ்ரேல் வாங்கி அவற்றை உருவாக்கத் தொடங்கியது. 1980 களில், இஸ்ரேலிய இராணுவம் லெபனானில் நடந்த போரின் போது இந்த ஆளில்லாத விமானத்தை அட்டூழியமான முறையில் பயன்படுத்தியது.

பின்னர் பலஸ்தீன போராட்ட காலத்தில் காசா பகுதியில் அதன் தாக்குதல்களில் பல ஆளில்லா வான்வழி கலங்களை (UAV) பயன்படுத்தியது.இந்த தாக்குதல் UAV கள் முன்மாதிரிகளை உருவாக்கி மத்திய கிழக்கில் பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகள் மீது மீண்டும் மீண்டும் இஸ்ரேலால் சோதிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் இஸ்ரேலின் மிகவும் விரும்பப்படும் தயாரிப்புகளில் ஒன்றாக இது மாறியது. 1990 கள் மற்றும் 2000 களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரமடைந்திருந்த நிலையில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிடம் இருந்து செய்த முக்கிய இராணுவக் கொள்வனவுகளில் இவையும் அடங்கும்.

இலங்கை இராணுவத்தின் சொந்த வார்த்தைகளில் கூறினால், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட UAV கள் போரில் முக்கிய பங்கு வகித்தன' என மனித உரிமை அமைப்புகள் தற்போது குரல் எழுப்பியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் பலமுறை பேட்டிகள் மற்றும் அறிக்கைகளில், தாக்குதல்களுக்கு முன், 'பொதுமக்களுக்கு பூஜ்ஜிய தீங்கு' என்ற கொள்கையின்படி, அப்பகுதியில் பொதுமக்கள் யாரும் காணப்படவில்லை என்பதை சரிபார்க்க, க்அங படம்பிடிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்டன என்று கூறியுள்ளனர்.

## பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்பு;

ஆனால், உண்மையில் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் பல என ஐ.நா.வும், மனித உரிமை அமைப்புகளும் தற்போது குற்றஞ்சாட்டியுள்ளன. ஐ.நா மதிப்பீடுகளின்படி, போரின் கடைசி மாதங்களில் மட்டும், 40,000







முதல் 75,000 வரையிலான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் அரசாங்க பாதுகாப்புப் படையினர் வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தியதால் கொல்லப்பட்டனர் என மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

2015 ஐநா அறிக்கை UAV களின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் உயிர் இழப்பு மற்றும் பொதுமக்களின் சொத்துக்களுக்கு சேதம் உண்டாகியது உண்மையே. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறி அரசாங்கம் மற்றும் இராணுவத் தலைவர்களின் உத்தரவுப்படி இஸ்ரேலிய UAV கள் பொதுமக்களின் மரணங்களை பாரியளவில் உருவாக்கியது.

இதன் மூலம் இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் மற்ற இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்தியது.

## தமிழர்க்கு எதிரான போர்:

தமிழர்க்கு எதிரான போரில், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட Kfirபோர் விமானங்கள், Dvoraமற்றும் Shaldagபோர்க்கப்பல்கள், தாக்குதல் பீரங்கி அமைப்புகள் மற்றும் Gabriel கடலில் இருந்து கடலுக்கு வீசும் ஏவுகணைகளையும் இலங்கை வாங்கியது.

அத்துடன் இஸ்ரேலிய கண்காணிப்பு UAV கள் இந்த கனரக ஆயுதங்களுக்கு வழிகாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை வேண்டுமென்றே பொதுமக்கள் மற்றும் மனிதாபிமான தளங்களை குண்டுவீசி அழித்தன. அத்துடன் கடுமையான செலவில் தமிழர்க்கு எதிரான போரை வெல்ல இந்த ஆயுதங்கள் உதவியதும் உண்மையே.

செஞ்சோலை கிராமத்தில் உள்ள சிறுமிகள் காப்பகத்தின் மீது இலங்கை விமானப்படை குண்டுவீசி 80 குழந்தைகளைக் கொன்றதுடன், பலரை காயப்படுத்தியது. ஆகஸ்ட் 14, 2006 இல் இஸ்ரேல் தயாரிப்பு Kfirவிமானங்களை உக்ரேனிய விமானிகளே ஓட்டி வந்து இக் கொடூர சம்பவத்தை விளைவித்தனர்.

## செஞ்சோலை படுகொலை:

இலங்கையில் உள்ள அரசுக்கு ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை மற்ற நாடுகளும் வழங்கின. அத்துடன் இஸ்ரேலிய இராணுவ ஆய்வாளர் ஷ்லோமி யாஸின் கூற்றுப்படி,'வழங்கப்பட்ட ஆயுதங்களின் பெறுமதி, பல நூற்றுக்கணக்கான மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டுகிறது.' போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜூலை 21, 2010 அன்று இஸ்ரேலிய Ynet News இணையத் தளத்திற்கு அவர் அளித்த பேட்டியில், 'தமிழர்க்கு எதிரான நமது போரில் பல ஆண்டுகளாக இஸ்ரேல் தகவல் பரிமாற்றம், இராணுவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை வழங்கி உதவியது' என்பதை உறுதிப்படுத்தினார்.

## இஸ்ரேலிலும் இலங்கையிலும் நீதி கேட்கும் தமிழர்:

போரின் போது நடந்த அட்டூழியங்கள் குறித்து சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து திரட்டப்பட்ட

சான்றுகள் மற்றும் பல அறிக்கைகள் இருந்தபோதிலும், அவர்களுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள், அல்லது இஸ்ரேல், மற்றும் பிற நாடுகளில் இருந்து அவர்களுக்கு மறைமுகமாக உதவியவர்கள் மீது இதுவரை வழக்குத் தொடரப்படவில்லை.

ஐ.நா. இறுதிப் போரின் போது பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. இது 2011 இல் ஊடகங்களுக்கு கசிந்த அதன் சொந்த உள்ளக அறிக்கையில் பிரதிபலித்தது. போருக்குப் பிறகு, ஐ.நா. பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீண்டும் தோல்வியுறச் செய்யும் வண்ணம், போர்க்குற்றங்கள் மற்றும் குற்றங்களுக்கான நீதியை அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடந்த மனித குலத்திற்கு எதிராக நடந்த கொடுமைகளை விசாரிக்கவும் இல்லை.

பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தும் மேற்கத்திய நாடுகள், தமது குறுகிய பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காக இலங்கை அரசாங்கத்துடன் வழக்கம் போல் வணிகத்தைத் தொடரவே விரும்புகின்றன.

இது உலகெங்கிலும் உள்ள சர்வாதிகாரிகள் மற்றும் அடக்குமுறை ஆட்சிகளுக்கு சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் முழுமையான அளவில் செய்யப்படலாம் என்ற சமிக்ஞையை அனுப்பியுள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில், இஸ்ரேலிய மனித உரிமை ஆர்வலர்கள், இஸ்ரேலின் நிறவெறிக் கொள்கைகள், மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களைத் தடுக்கவும் முயல்கின்றனர்.

## இஸ்ரேலிய ஈடுபாடு :

பிப்ரவரி 2002 மற்றும் மே இடையே இலங்கை உள்நாட்டுப் போரில் இஸ்ரேலிய ஈடுபாடு பற்றிய தகவல்களை சேகரித்த அவர்கள், 2009 சர்வதேச மற்றும் இஸ்ரேலிய தண்டனைச் சட்டத்தின் கீழ், இஸ்ரேலிய நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் தனியார் தனிநபர்கள் செய்த குற்றங்களில் ஈடுபட்டுள்ள குற்றவியல் விசாரணையை நியாயப்படுத்த போதுமான ஆதாரங்கள் உள்ளன எனக் கூறியுள்ளனர்.





இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட இஸ்ரேலியர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணையை ஆரம்பிக்குமாறு இஸ்ரேலின் அட்டர்னி ஜெனரலிடம் கோரிக்கையை முன்வைக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர். அதனை சர்வதேச அரங்கிலும் செய்ய முயல்கின்றனர்.

ஆயினும் சட்ட நடவடிக்கைக்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஒருவேளை இலங்கையில் நடந்த குற்றங்களை உலகம் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விடலாம்.காஸாவிலும் மேற்குக் கரையிலும் இஸ்ரேல் தொடர்ந்து குற்றங்களைச் செய்வது உலகம் அறிந்ததே.

**ஐ.நா. இறுதிப் போரின் போது பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. இது 2011 இல் ஊடகங்களுக்கு கசிந்த அதன் சொந்த உள்ளக அறிக்கையில் பிரதிபலித்தது. போருக்குப் பிறகு, ஐ.நா. பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீண்டும் தோல்வியுறச் செய்யும் வண்ணம், போர்க்குற்றங்கள் மற்றும் குற்றங்களுக்கான நீதியை அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடந்த மனித குலத்திற்கு எதிராக நடந்த கொடுமைகளை விசாரிக்கவும் இல்லை.**



# கறுப்பு ஜூலை 40 வது வருடம்




கே.கே.எஸ்.

# விழிப்புணர்வுடன் இருக்கவும்

'கறுப்பு ஜூலை'யின் நாற்பதாவது ஆண்டு நிறைவானது, விழிப்புணர்வுடன் இருக்கவும், நீதி மற்றும் நல்லிணக்கத்திற்காக தீவிரமாக செயற்படவும், கடந்த கால தவறுகள் மீண்டும் நடக்காத சமூகத்தை உருவாக்கவுமான நினைவூட்டலாக அமைய வேண்டும்.

2023ஜூலையானது இலங்கையில் இன வன்முறையின் மிகக் கொடூரமான அத்தியாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 'கறுப்பு ஜூலை'யின் 40வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. சுமார் 300–450 உயிர்கள் பலியாகின, 40,000 க்கும் மேற்பட்ட மக்கள் அகதி அந்தஸ்துக்கு தள்ளப்பட்டதுடன் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் அகதி அந்தஸ்து கோரி மேற்கு நாடுகளிற்கு புலம்பெயர்ந்ததுடன் உலகளாவிய தமிழ் மன்றத்திற்கு அடித்தளமிடுவதாக அமைந்தது.

அந்த தருணத்தில் தொழில் மற்றும் தொழில்நுட்ப அமைச்சராக இருந்த சிறில் மத்யூ இந்த நடவடிக்கைகளைத் தொடங்குவதில் வகிபாகத்தைகொண்டிருந்ததாக கூறப்பட்டது. இனவாதக் கருத்துக்களைக் கொண்டவராகக் கருதப்பட்ட மத்யூ, தெற்கிலிருந்து திருகோணமலைக்கு பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்போடு குண்டர்களை அழைத்து வந்திருந்தார். இது அப்பகுதியில் பயங்கரம் ஆட்சிபுரிய வழி வகுத்தது.

மத்யூ, ஜனாதிபதியின் நெருங்கிய நம்பிக்கைக் குரியவராக இருந்ததால், சில சலுகைகளை அனுபவித்து, தண்டனைவிலக்குடன் செயற்பட்டதாகக் கூறப்பட்டது.

ஜனாதிபதியாக வருவதற்குயாழ்ப்பாணம் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாக்குகளை நம்பியிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன 1983 ஜூலை ஆரம்பத்தில் டெய்லி டெலிகிராப்பிற்கு அளித்த பேட்டியை 1983 ஜூலை 17 அன்று ஞாயிறு ஒப்சேவர் கொழும்பில் மறுபிரசுரம் செய்திருந்தது.

சர்ச்சைக்குரிய அறிக்கையில் அவர், யாழ்ப்பாண மக்களின் கருத்தைப் பற்றி நான் இப்போது கவலைப்படவில்லை. இப்போது அவர்களைப் பற்றி சிந்திக்க முடியாது. அவர்களின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது எங்களைப் பற்றிய அவர்களின் கருத்துகளைப் பற்றியோ அல்ல. வடக்கில் எவ்வளவு அழுத்தம் கொடுக்கிறீர்களோ, அந்த அளவுக்கு சிங்கள மக்கள் இங்கு மகிழ்ச்சியாக இருப்பார்கள்...என்று குறிப்பிட்டிருந்தார்.




துரதிர்ஷ்டவசமாக, 1956 முதல், பண்டாரநாயக்கவின் 'சிங்களம் மட்டும்' கொள்கையின் கீழ், தீவு இன வன்முறைச் சுழற்சிகளை அனுபவித்தது. இரு தரப்பிலும் மக்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், அவர்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைமாறியிருந்தது. மற்றும், அவர்களது உடைமைகள் சூறையாடப்பட்டுள்ளன, சேதப்படுத்தப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன.

1983 கலவரம் முந்தைய இனவாத கலவரங்களுடன் ஒப்பிடுகையில், மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட இயல்புடனிருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த இருண்ட வாரத்தின் பயங்கரங்களும் குழப்பங்களும் இரு சமூகத்தினரின் மனதிலும் பதிந்துள்ளன. கொழும்பில் வன்முறைக் கும்பல் தமிழர்களின் வீடுகளை அடையாளம் காண வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தியது. பின்னர் தீவின் ஏனைய பகுதிகளுக்கும் வன்முறை பரவியது.

தீவின் பல இன மற்றும் பிளவுபட்ட சமூகத்தின் மீது இந்த வன்முறையின் உளவியல் மற்றும் சமூகவியல் விளைவுகள் கடுமையாக உள்ளன.

மிகவும் அதிர்ச்சியூட்டும் அழிவு 1983ஜூலை 24, அன்று நிகழ்ந்தது. நாட்டின் பொருளாதாரம் பாழடைந்து போனது. ஒரு வாரமாக நடந்த வன்முறையால் தேசத்தை இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக யுத்தம் மற்றும் பேரழிவிற்குள் தள்ளியது. அடுத்த மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஐம்பது சதவீதம் வீழ்ச்சி பதிவாகி, பொருளாதார வளர்ச்சியில் சரிவுக்கு வழிவகுத்தது, இதன் விளைவாக வேலை இழப்புகள் மற்றும் வர்த்தக மூடல்கள் ஏற்பட்டன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இராணுவ ஜீப்பின் கீழ் வெடிகுண்டு வெடிக்கப்பட்டது, இதன் விளைவாக 13 வீரர்கள் உடனடியாக இறந்தனர். யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் மறுநாள், கனத்தையில் அடக்கம் செய்வதற்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, இராணுவம் பதிலடி கொடுத்து பல பொதுமக்களைக் கொன்றது. பதுங்கியிருந்து தாக்கிய சம்பவம் ஒன்று அதிக எண்ணிக்கையிலான இராணுவ உயிரிழப்புகளை ஏற்படுத்தியது இதுதான் முதற் தடவை.

அரசாங்கத்தின் சக்திவாய்ந்த ஐதேக தொழிற்சங்கமான தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஆதரவுடன் கட்டுக்கடங்காத குண்டர்கள், தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், வர்த்தகங்கள் மற்றும் தொழிற்சாலைகளை அழித்தார்கள். அதிகாரிகள் கண்ணை மூடிக்கொண்டனர். சிறுபான்மை

சமூகத்திற்கு போதிய பாதுகாப்பை வழங்குவதில் பாதுகாப்புப் படையினர் பெரிதும் பயனற்றவர்களாக இருந்தனர். கலவரத்தைத் தடுக்க அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

சிதைந்த இராணுவ உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவில்லை. 13 பேரின் உடல்களையும் ஜூலை 24ம் திகதி இரவு கனத்தையில் அடக்கம் செய்ய அரசு ஏற்பாடு செய்தது. மயானத்தில் கூடியிருந்த மக்கள்கூட்டம் வன்முறையாக மாறியது, பின்னர் வன்முறை நகரின் ஏனைய பகுதிகளுக்கும் தீவின் பல்வேறு இடங்களுக்கும் பரவியது.

ஜூலை 24 அன்று இரவு பொரளையில் தமிழ் வணிக வளாகங்கள் அழிக்கப்பட ஆரம்பித்து மறுநாள் காலை வரை தொடர்ந்தது. ஆரம்ப தாக்குதல்கள் அழிவை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தாலும், கொள்ளையடிக்கப்பட்டதால் விரைவில் 25,000 பேர் வேலைகளை இழந்தனர். அழிப்புகள் பெரும்பாலும் சிங்களவர்களால் நடத்தப்பட்டன.

அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டதை தொடர்ந்து, ஜே.வி.பி., இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எஸ்.எல்.), மற்றும் நவசமசமாஜ கட்சி (என்.எஸ்.எஸ்.பி.) ஆகியவை தடை செய்யப்பட்டன. மற்றும் குழப்பங்களை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டன.

காலனித்துவ காலத்தில் பிரித்தானியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரித்து ஆட்சி செய்யும் கொள்கையானது, தமிழர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் போன்ற சிறுபான்மையினரை இலங்கையின் பொது சேவை, பாதுகாப்பு மற்றும் பிற தொழில்களில் அதிகார பதவிகளில் அமர்த்துவதற்கான காரணியாக குறிப்பிடப்படுகிறது.

இந்தக் கொள்கை சிங்களப் பெரும்பான்மையினரால் அவர்களைக் கட்டுப்படுத்தும் திட்டமாகவே பார்க்கப்பட்டது என்பது மறைமுகமாகத் தெரிகிறது. 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்த அதிகார சமநிலையின்மையை அங்கீகரித்தனர்.

1983ஜூலை படுகொலை வெறுமனே இன, மொழி அல்லது மதப் பிரச்சினை அல்ல என்பதை அங்கீகரிப்பது முக்கியம். இது ஆளும் உயரடுக்கின் நலன்கள் மற்றும் சலுகைகளைப் பாதுகாப்பதற்காக தூண்டப்பட்ட வன்முறைக் கலவரங்களின் ஒரு உச்சகட்டமாகும். பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் இருந்து பெறப்பட்ட ஆளுகை முறையானது நாட்டின் சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் நீதித்துறை கட்டமைப்புகளில் இன்னும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை இது வலியுறுத்துகிறது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆட்சியானது, 1948 இன் இலங்கைப் பிரஜாவுரிமை சட்டம் மற்றும் 1949 பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் போன்ற சட்டங்களை இயற்றியது. கிட்டத்தட்ட 10 இலட்சம்தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையை மறுத்து, நாடற்ற மக்கள் தொகையை உருவாக்கியது. இது தொழிலாளர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறியது மட்டுமல்லாமல், இன மற்றும் மத அரசியலையும் தூண்டியது.

1956, 1958, 1963, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களைக் குறிவைத்து கலவரங்கள் வெடித்தன. கலவரத்தில் சித்திரவதை, சூறையாடல் மற்றும் தீவைப்பு ஆகியவை அடங்கும். இந்த கொடூரமான குற்றங்களுக்கு பொறுப்பான தனிநபர்கள் மற்றும் அவர்களது அரசியல் ஆதரவாளர்கள், பெருகிய முறையில் சர்வாதிகார, ஊழல் மற்றும் பொறுப்பற்ற அரசியல் உயரடுக்கின் காரணமாக தண்டனை விலக்கை அனுபவித்தனர் என்பதை வலியுறுத்துவது முக்கியமானது.



இந்த தண்டனைவிலக்கீடு வன்முறையின் சுழற்சியை நீடித்தது மற்றும் சமூகத்திற்குள் இருக்கும் பிளவுகளை ஆழமாக்கியது. ஒட்டுமொத்தமாக, வரலாற்று அநீதிகளை அங்கீகரிப்பதன் மூலம் உண்மையான நல்லிணக்கத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பிரிவினைகளைக் குறைப்பதற்கும், அனைவருக்கும் நீதியை மேம்படுத்துவதற்கும் நேர்மையான முயற்சிகள் மூலம் மட்டுமே, நீண்டகால அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அடைய முடியும்.

'கறுப்பு ஜூலை' நிகழ்வுகள் இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் இனப் பதற்றங்களில் இருந்து உருவாக்கப்பட்டது. வரலாற்றின் இந்த துயரமான அத்தியாயத்திலிருந்து படிப்பினைகள் முழுமையாக உள்வாங்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது. நான்கு தசாப்தங்களுக்குப் பிறகு, முன்னேற்றம் மற்றும் எஞ்சியிருக்கும் சவால்களை மதிப்பிடுவது மிகவும் முக்கியமானது. நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் மற்றும் மோதலின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் 'கறுப்பு ஜூலை' முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2010 இல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்பட்டது. அது முரண்பாட்டைப்



புரிந்துகொள்வதிலும், தீர்வுக்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதிலும் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் மற்றும் அரசியலமைப்பு பேரவை போன்ற முயற்சிகள் உள்ளடக்கம், நீதி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும், உண்மையான நல்லிணக்கத்திற்கும் நிலையான சமாதானத்திற்கும் இடையூறான அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்னும் நிறைய வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. 'கறுப்பு ஜூலை' மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போரின் போது ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்த, நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவது, உரையாடலை வளர்ப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வது ஆகியவை தேவை.

இந்த செயற்பாட்டில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. எதிர்கால சந்ததியினரிடையே பச்சாதாபம், புரிதல் மற்றும் விமர்சன சிந்தனையை வளர்க்க பாடத்திட்டங்களில் விரிவான மற்றும் துல்லியமான வரலாற்றுக் கணக்குகள் சேர்க்கப்பட வேண்டும். சமத்துவ வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவை பதட்டங்களைத் தூண்டும் இடைவெளிகளைக் குறைப்பதற்கு அவசியம்.

'கறுப்பு ஜூலை'யின் நாற்பதாவது ஆண்டு நிறைவானது, விழிப்புடன் இருக்கவும், நீதி மற்றும் நல்லிணக்கத்திற்காக தீவிரமாக செயல்படவும், கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத சமூகத்தை உருவாக்கவும் நினைவூட்டலாக அமைய வேண்டும். இறுதியில், இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களும் சமாதானம், கௌரவம் மற்றும் நல்லிணக்கத்துடன் வாழ்வதை உறுதிப்படுத்தும் வகையில் 'கறுப்பு ஜூலை' பாடங்கள் அர்த்தமுள்ள நடவடிக்கையாக மாற்றப்பட வேண்டும்.



# மனிதப் புதைகுழிகள் உண்மைகளை புதைக்குமா?

**1983** இல் ஒரு துக்கமான தினத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜேஸ்வரி தனது வாழ்நாளில் கடைசியாக கணவனைப் பார்த்தார். ஆனால் அந்த நாளுக்குப் பிறகும் ஒரு நாள் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையுடன் அவர் பொட்டு அணிந்திருக்கிறார். நாற்பது வருடங்கள் கழித்து இந்த பொட்டு அவரின் வாழ்க்கைக்கு சுமையாக மாறிவிட்டது.

இந்த பொட்டை இடுவதில் அவருக்கு எந்த நோக்கமும் இல்லை, ஆனால் அவர் கணவன் ஒரு நாள் திரும்பி வருவார் என்று எதிர்பார்க்கிறார் . இலங்கையில் இடம்பெற்ற 30 வருட இன மோதல் மற்றும் அரசியல் கிளர்ச்சிகளின் போது தமது அன்புக்குரியவர்களை இழந்த பல விதவைகள், பிள்ளைகள் மற்றும் தனிநபர்களின் அவல நிலை இதுவாகும். யுத்தம் முடிவடைந்து, இலங்கை சமாதானத்தை அடைந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும், பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.

இவற்றில் ஒன்று நாடு முழுவதும் கண்டுபிடிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான மனிதப் புதைகுழிகள் ஆகும். சோபி பிஸ்பிங்கின் ‘இலங்கையில் மனிதப் புதைகுழிகள்: வரலாறு மற்றும் சட்டக் கட்டமைப்பு’ என்ற தலைப்பிலான சமீபத்திய அறிக்கை, 1992 மற்றும் 2022 க்கு இடையில் 32 பாரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது. இது துன்பமான யதார்த்தத்தை வெளிப்படுத்துகிறது.

ருவின் டி சில்வா இயக்கிய 30 நிமிட ஆவணப்படமான ‘இன் ப்ளைன் சைட்’ வெளியானதைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டது, இது இலங்கையில் பாரிய புதைகுழிகள் மற்றும் தோல்வியுற்ற தோண்டியெடுத்தல் பிரச்சினையின் சிக்கலான தன்மையை கோடிட்டுக் காட்டுகிறது. பட்டியலிடப்பட்டுள்ள 32 புதைகுழிகளில் இதுவரை ஏழு கல்லறைகள் மட்டுமே தோண்டப்பட்டதாக அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

சூரியகந்த, செம்மணி, யாழ்ப்பாணம், மாத்தளை, களவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் உள்ள புதைகுழிகளும் மன்னாரில் உள்ள இரண்டு இடங்களும் இதில் அடங்கும். வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் உள்ள மக்கள் பல வருடங்களாக, தமது அன்புக்குரியவர்கள் காணாமல் போனமை தொடர்பில் பதில்களுக்காக ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பி வருகின்றனர். மனிதப் புதைகுழிகளில் பலியானவர்களில் சிலர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி சந்தேகிக்கப்படுகிறது. வலுக்கட்டாயமாக அல்லது சுய விருப்பமில்லாமல் காணாமல் போனோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவில் பதிவு





செய்யப்பட்ட வழக்குகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. 1983 ஆம் ஆண்டு யுத்தம் தொடங்கியதில் இருந்து 60,000 முதல் 100,000 பேர் வரை பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் எவ்வாறு புதைக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கு எந்த நினைவுச் சின்னங்களும் இல்லாமல் இருக்கின்றன என்பதை இந்த ஆவணப் படம் எடுத்துக்காட்டுகிறது. இந்தமனிதப் புதைகுழிகள்தண்ணீர் குழாய்களை அமைப்பதற்காக அல்லது கட்டுமானங்களை அமைப் பதற்காக பணிக்கு அமர்த்தப்பட்டகட்டுமானத் தொழிலாளர்கள் பலரால் கண்டுபிடிக்கப்பட்டன.

## இலங்கையின் கடப்பாடுகள்

இருப்பினும், இந்த தளங்கள் மற்றும் அவற்றின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் நினைவுகூருதல் தொடர்பான சட்டங்கள் பற் றிய அறிவு குறைவாகவும் சிதறியதாகவும் உள்ளது. ‘மனிதப் புதை குழிகளை கையாளும் ஒரு அரசு என்ற வகையில் இலங்கையின் கடப்பாடு குறித்து நாம் அறிந்திருக்க வேண்டும்’ என சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் சர்வதேச தண்டனைச் சட்டம் பல ஆண்டுகளாக, காணாமல் போனவர்களின் குடும்பங்களின் உரிமைகள் மற்றும் எச்சங்களை மரியாதையுடன் நடத்துவது, என்ன நடந்தது என்பது பற்றிய உண் மையை நிறுவுவது, யார் பொறுப்பு என்று விசாரிக்க வேண்டிய கட மைகள் ஆகியவற்றை நிர்ணயித்துள்ளது. செய்த குற்றங்களுக்காக அவர்களை நீதியின் முன் நிறுத்துதல், கல்லறை இடங்கள் மற்றும் அங்கு புதைக்கப்பட்டவர்களை நினைவுகூருவது மற்றும் குடும்பங் களுக்கு இழப்பீடு வழங்குவதும் இதில் அடங்கும்.

ஐ. நா.வால் உருவாக்கப்பட்ட மினசோட்டா விதி முறை என்பது நீதிவிசாரணைக்குப் புறம்பான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகளைத் தடுப்பதற்கும் விசாரணை செய்வதற்கும் ஒரு விரிவான கையேடாகும். அகழ்வுகளை அரசாங்கங்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பது பற்றிய பல விவரங்கள் இதில் உள்ளன. மினசோட்டா நெறிமுறை 1983 இல் பிலிப்பைன்ஸில் பெறப்பட் டது. அந்த நேரத்தில் இந்த சட்டவிரோத கொலைகள் தொடர்பான வழிகாட்டுதல்கள் அல்லது விதிமுறைகள் எதுவும் இல்லை.

அதன்பிறகு, பிரிட்டனில் உள்ள போர்ன்மவுத் பல்கலைக்கழகத் தில் உள்ள காணாமல் போனோர்களுக்கான சர்வதேச ஆணைக்குழு மேம்படுத்திய நெறிமுறை ‘போர்ன்மவுத் புரோட்டோகால்’ என்று அறியப்படுகிறதுஎன்று ரத்னவேல் கூறினார் .

போதுமான சட்ட மற்றும் கொள்கைரீதியான கட்டமைப்புகள் இல்லை இலங்கையின் தரநிலைகள், தோண்டுதல்கள் மற்றும் அது தொடர்பான விசாரணைகள் தொடர்பான சட்ட மற்றும் கொள் கைரீதியான கட்டமைப்புகள் போதுமானதாக இல்லை என்று ரத்ன வேல் கூறுகிறார். போதாத தன்மைகள் பற்றி நாம் பேசும் போது, இலங்கையின் சட்டமானது தோண்டியெடுத்தல் மற்றும் வலுக்கட் டாயமாக காணாமல் போனவர்கள் தொடர்பான நடைமுறைகளை வழங்கவில்லை.

அண்மையில் மன்னார் மனித புதைகுழிகள் தொடர்பான வழக்கு கள் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அரச அதிகாரிகள் சார்பில் ஆஜரான சட்டமா அதிபர், இந்த நடவடிக்கைகளை விசாரணை நடவடிக்கையாகவோ அல்லது சாதாரண நிகழ்வாகவோ கருதினார். இது போதாதது மற்றும் பொருத்தமற்றது என்று அவர் முதலில் சுட்டிக் காட்டியபோது சட்ட நடவடிக்கைகளில்குடும்பங்கள் சார்பில் வழக்கறிஞர்கள் ஆஜராக முடியாது என்று நீதிமன்ற உத்தரவு இருந்தது. ஆனால் பின்னர், குடும்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகளின் உரிமை தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது, என்றார் ரத்னவேல்.

## பயனற்ற முயற்சிகள்

2015 முதல் தற்போதைய சட்டங்களை திருத்த பல்வேறு முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அவை எதுவும் பலன் அளிக்கவில்லை. எவ்வாறாயினும்,மனிதப் புதைகுழிகள் தொடர்பாக காணாமல் போனோர் தொடர்பான அலுவலகச் சட்டத் தில் சில பயனுள்ள விதிகளை சட்ட நிபுணர்கள் அவதானிக்கின் றனர். தோண்டி எடுக்கப்படுவதைக் கவனிப்பதற்கான ஏற்பாடும் இதில் அடங்கும்.

ஆனால், அவதானித்தல், நீதிவானுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் வெளிநாட்டில் மாதிரிகளை ஆய்வு செய்வதற்கு வசதியாக மற்றும் அனுமதிப்பதற்கு அவரது வரவு செலவுத் திட்டத்தைப் பயன்ப டுத்துவதில் அதிகாரிகளின் ஈடுபாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் காணாமற்போனோருக் கான அலுவலகம் பற்றி மிகவும் சந்தேகம் கொண்டுள்ளனர்.

காணாமற் போனோர் அலுவலக சட்டத்தில் ஒரு பிரச்சனைக்குரிய பிரிவாக 32 உள்ளது, காணாமற்போனோர் அலுவலக விசாரணை களின் கண்டுபிடிப்புகள் எந்தவொரு குற்றவியல் அல்லது சிவில் பொறுப்புக்கூறலுக்கும் வழிவகுக்காது என்று கூறுகிறது. தகவல் அறியும் உரிமையின் கீழ் மனித புதைகுழிகள் பற்றிய எங்கள் கோரிக்கைக்கு காணாமற்போனோருக்கான அலுவலகம் பதிலளித்த விதம், எங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் இருப்பது, அது எவ்வளவு சிக்கலாக மாறியுள்ளது என்பதற்கான அறிகுறியாகும், என்றும் ரத்னவேல் மேலும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், மன்னார் மனித புதைகுழியை தோண்டி எடுக்கும் முக்கிய விடயத்தில் சாலிய பீரிஸ் தலைமை யிலான காணாமற்போனோர்அலுவலகம் அன்றாட நடவடிக்கை களுக்கு நிதியளித்து இயன்றளவு பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சாதகமான குறிப்பில், ஒரு புதிய விசாரணைச் சட்டம் மற்றும் தோண்டி எடுப்பதற்கான நிலையான இயக்க நடைமுறைகளைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் இருந்தன. இதுவரை எங்களி டம் எந்த கருத்தும் கேட்கப்படவில்லை. இந்தப் புதிய சட்டங்களை நாம் சரியாகப் பெறுவது முக்கியம், அது முழு வெளிப்படைத்தன் மையுடனும், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் உட்பட ஒவ்வொரு பங்குதாரர்களுடனும் கலந்தாலோசித்து மட்டுமே செய்ய முடியும் எந்தவொரு தடயவியல் நிபுணரும், சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பில் உள்ள சிக்கல்கள், வெவ்வேறு தடயவியல் அறிக் கைகளை ஒருங்கிணைத்தல், நெறிப்படுத்துதல் எளிதாக்குதல்,





இல்லாமை மற்றும் தடயவியல் குழு வெவ்வேறு தடயவியல்அறிக்கைகள் குறித்து உடன்படாததால் அவை மீண்டும் சமர்பிக்கப்படாமைபோன்ற வையாகும்.

இது மாத்தளையில் நாம் பார்த்தது போல் நீதிவான் நடைமுறைப் படுத் துவதற்கு போராடுவதற்கும், சில சமயங்களில் விசாரணைகளை தாம தப்படுத்துவதற்கும், விடயங்களை நிறுத்துவதற்கும் வழிவகுக்கும்போன்ற பல நடைமுறைச் சிக்கல்களை விளை வித்துள்ளன என்பதை ஒப்புக்கொள் வார்கள்என்று அவர் கூறினார்.

## குடும்பங்களின் பங்கேற்பு

தோல்வியின் எட்டு பகுதிகளை அறிக்கை அடையாளம் காட்டுகிறது. முதல் மற்றும் மிக முக்கியமான ஒன்று, தற்போது அகழ்வு நடவடிக்கைகளில் காணாமல் போனவர்களின் குடும்பங்க ளின் ஈடுபாடு இல்லாமையாகும். களு வாஞ்சிக்குடியில் வழக்கை ஆரம்பித்து இன்றுவரை நடத்தப்பட்ட 20 தோண் டுதல்களின் சுருக்கம் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இதுவரை மரணத்திற்கு முந்தைய தரவுகளை சேகரிக்கவில்லை என்பது மிகவும் வருத்தமளிக்கிறது. அத்தகைய முன்கூட்டிய பிரேதத் தரவு இல்லாமல், எச்சங்களை அடையாளம் கண்டு அவர்களின் குடும்பங்களுக்குத் திருப்பித் தருவது மிகவும் கடினம். அந்த இடத்தில் காணப்படும் ஆடைகள் அல்லது பொருட்களின் அடிப்படை யில் எச்சங்கள் அடையாளம் காணப் பட்ட சில சந்தர்ப்பங்களில், எச்சங்கள் குடும்பங்களுக்குத் திருப்பித் தரப்பட வில்லை, மேலும் தோண்டியெடுக்கும் போது வழக்கறிஞர்கள் இருக்க தடை விதிக்கப்பட்டுள்ளது, என்றார்.

காணாமற்போன உறவினர்களின் சடலங்கள் மீட்கப்படும் என்ற நம்பிக் கையில் இருந்த அண்மித்த பகுதியி லுள்ள குடும்பத்தினரின் நம்பிக்கை பொய்த்துள்ளது. அவர்கள் புறக்கணிக் கப்பட்டுள்ளனர் மற்றும் பேசுவதற்கு எந்த ஆதரவும் இல்லை. தோண்டியெ டுக்கும் செயல்முறையின் அனைத்து நிலைகளிலும் குடும்பங்களை ஆதரிப் பதற்கும் உளவியல்ரீதியாக சமூக ஆத ரவில் உதவுவதற்கும் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவது நல்ல நடைமுறையாகும்.

## சட்டமா அதிபர் அலுவலகத்தின் வகிபாகம்

சட்டமா அதிபர் அலுவலகம் ஆற் றிய எதிர்மறையான வகிபாகத்தை அவர் மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டினார். ஆரம்ப கட்ட விசாரணை கள் நம்பிக்கைக்குரியதாக காணப்பட்ட போதிலும், சட்டமா அதிபர் அலுவலக சட்டத்தரணிகள் இல்லாமை சில வழக்குகளுக்கு தடையாக காணப்பட் டது. சட்டமாஅதிபர் அலுவலகத்தின் எதிர்மறையான வகிபாகம் தொடர்பான எங்கள் பகுப்பாய்வில் வலுவான முடிவு உள்ளது.

செம்மணி வழக்கில், ஒன்பது சந்தேக நபர்களில் நான்கு பேர் விடுவிக்கப் பட்டு, பின்னர்குற்றச் சாட்டிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். வலுக்கட்டா யமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு 2002 இல் பகிரங்கப்படுத்தப்பட்ட அதன் இறுதி அறிக்கையில் ஒரு சுயா தீனமான அரச வழக்குரைஞர் அதிகார த்தை ஸ்தாபிக்குமாறு பரிந்துரைத்தது.

20 வருடங்களுக்குப் பின்னரும், ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற் றும் பல நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளன. ஐ.நா.வும் மீண்டும் மீண்டும் அதே பரிந்துரைகளை புறக்கணிக்க மட்டுமே செய்துள்ளது, என்று அவர் மேலும் கூறினார்.

## தோல்விக்கு வழிவகுக்கும் ஏனைய காரணிகள்

இதுவரை தோண்டியெடுப்பதில் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்திய மிக முக்கியமான காரணி அரசியல் தலையீடு ஆகும். மாத்தளை அகழ்வு கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எவ்வாறு நீதிவான் விசாரணையை புறக்கணித்து விசாரணை ஆணைக்குழுவை நியமித்தார் என்பது குறித்தும் ரத்னவேல் குறிப்பிட்டார்.

அதன்பின், மாதிரிகள் அமெரிக்காவிற்கு அனுப்பப் பட்டன,. உள்ளூர் தடயவியல் ஆராய்ச்சியாளர்கள் அவை 1980 களின் பிற்பகுதியில் இருந்தவர் கள்என்று முடிவுசெய்திருந்தாலும், உதாரணமாக கோத்தாபய ராஜபக்ச இராணுவ முகாமின் தளபதியாக மாத்தளை மாவட்டத்திற்கு பொறுப்பாக இருந்த ஜே.வி.பி கிளர்ச்சி காலகட்டம்என்று முடிவு செய் திருந்தாலும்,அவை 1950 கள் காலப்பகுதியென வந்தன.

2014 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், குறித்த எச்சங்கள் விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அனுமானத் தில் ஆரம்பத்தில் துரிதப்படுத்தப்பட்டது. ஆனால், 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத் தில் இருந்து விலகி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இணைந்த கருணா அம்மான் இந்த குறிப்பிட்ட புதைகுழி தொடர்பாக சம்பந்தப் பட்டிருப்பதை அரசு உணர்ந்து சில நாட்களுக்குப் பிறகு விசாரணைகள் ஸ்தம்பித்தன.

தோண்டியெடுக்கும் இடங்கள் எப்போதும் நன்கு பாதுகாக்கப்படுவதில்லை என்பதையும் நாம் பார்த்தி ருக்கிறோம்.

உதாரணமாக மன்னாரில் பொலிசார் தோண்டி எடுப்பதற்கு இன்னும் பல உடல்கள் இருந்த போதிலும், அந்த இடம் சிதைந்துவிடும் என்று நாங் கள் கவலைப்படுகிறோம். விசாரணைகள் மற்றும் தோண்டுதல்களின் போது முக்கியமான இடங்களில் நீதிபதிகள் மற்றும் சில சமயங்களில் தடயவியல் நிபுணர்கள் மாற்றப்படும் பழக்கமும் உள்ளது. மன்னா ரில், ஏழு நீதவான்களுக்கு குறையாமல் வழக்கு விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், வழக்கு களும் கொழும்புக்கு மாற்றப்பட்டு, விசாரணைக்கு வருவதற்கு குடும்பங்கள் மற்றும் சாட்சிகள் சிரமப்ப டுகின்றனர்.

இது செம்மணி வழக்கில் நடந்தது. இலங்கையில் தடயவியல் நிபுணத்துவத்திற்கு ஒதுக்கப்பட்ட வளங் களின் பற்றாக்குறையுடன் தொழில்நுட்ப அறிவின் பற்றாக்குறை மிகவும் நெருக்கமாக தொடர்புடை யது என்பதை எந்தவொரு தடயவியல் நிபுணர்க ளும் ஒப்புக்கொள்வார்கள். டிஎன்ஏ விவரக்குறிப்பு, கணணி மயமாக்கப்பட்ட முக புனரமைப்பு மற்றும் அங்கீகாரம், வீடியோ மேலோட்டம் மற்றும் பகுப் பாய்வு ஆகியவற்றில் விஞ்ஞானிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக மனித அடையாள நிலையத்தை நிறுவ ஆணைக்குழு பரிந்துரைத்த போதிலும்,









அது அமைக்கப்படவில்லை,' என்று அவர் கூறினார்.

## 78 உறுதிமொழிப் பத்திரங்கள்

2011ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்த பாரிய புதைகுழிகளில் உள்ளவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் எந்தவொரு தகவலையும் கண்டுபிடிக்க முடியவில்லை என தனது அனுபவங்களைச் சேர்த்த சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்தார். மாத்தளை மனித புதைகுழி தோண்டி எடுக்கப்பட்ட போது சுமார் 160 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

1988 க்கு இடையில் 1990 களின் ஆரம்பம் வரை மாத்தளையில் சுமார் 45 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. எலும்புக்கூடு எச்சங்கள் மீட்கப்பட்டதையடுத்து, அப்பகுதியில் காணாமல் போனவர்களின் குடும்பத்தினருக்கு இந்த எச்சங்கள் அவர்களது உறவினர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுக்கு சொந்தமானவையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பேராசிரியர் ராஜ் சோமதேவ, அப்போதைய நீதித்துறை வைத்திய அதிகாரி அசோக ஜயசேனவிடம், 1987 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்த எச்சங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறி அறிக்கை ஒன்றை வழங்கியிருந்தார். சில வாக்குமூலங்களில் அன்புக்குரியவர்கள் அல்லது உறவினர்கள் எங்கு காணாமல் போனார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வாக்குமூலத்தில் காணாமல் போனவர்கள் சில காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த தடுப்பு நிலையங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றுமொரு வாக்குமூலத்தில் தம்புள்ளையைச் சேர்ந்த நபர் ஒருவர் மாத்தளையில் எவ்வாறு தடுத்து வைக்கப்பட்டார் என்பதும், இராணுவ முகாமில் அவரது மனைவி கையொப்பமிடப்பட்ட கடிதத்தை அவரிடமிருந்து எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் இவர்கள் அனைவரும் காணாமல் போயுள்ளனர் என்றார்.

ஆனால் 2012 ஆம் ஆண்டு மீண்டும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது பல சட்டத்தரணிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வழக்கை ஆதரிக்க தயக்கம் காட்டினர். ஏனெனில் 2012 ஆம் ஆண்டளவில் யுத்தம் முடிவடைந்து சில இராணுவ அதிகாரிகள் தேசிய வீரர்களாக

> **2015 முதல் தற்போதைய சட்டங்களை திருத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அவை எதுவும் பலன் அளிக்கவில்லை. எவ்வாறாயினும், மனிதப் புதைகுழிகள் தொடர்பாக காணாமல் போனோர் தொடர்பான அலுவலகச் சட்டத்தில் சில பயனுள்ள விதிகளை சட்ட நிபுணர்கள் அவதானிக்கின்றனர். தோண்டி எடுக்கப்படுவதைக் கவனிப்பதற்கான ஏற்பாடும் இதில் அடங்கும்.**

மாறியிருந்தனர். ஆனால் அவர்கள் 1988, 1989 காலப்பகுதியில் மாத்தளையில் நிலைகொண்டிருந்தனர் என்பதே உண்மை. அப்போதைய அரசியல் சூழல் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வெளிப்படையாகப் பேசத் தயங்கினார்கள். அவர்கள் இராணுவத்திற்கு எதிராக பேசுவதற்குப் பயந்தனர் மற்றும் அவர்கள் உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் இழப்பீடு கோர முடியாது என்று பயந்தனர். இந்தப் பின்னணியில்தான் 78 பிரமாணப் பத்திரங்கள் நீதவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டு குற்றவியல் நடைமுறைக் கோவை சட்டத்தின் 138ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டன என்று குமரப்பெரும கூறினார்.

எவ்வாறாயினும், இரண்டாவதுதடவை கருத்தைப் பெறும் நம்பிக்கையுடன் சிஐடி மாதிரிகளை சீனாவுக்கு அனுப்பியது. ஆனால் சீனாவிடம் இருந்து இலங்கை எந்த விதமான தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் பெறவில்லை. 'நாங்கள் பிரிட்டன், அமெரிக்கா அல்லது இந்தியாவிற்கு மாதிரிகளை அனுப்பியுள்ளோம். மேலும் இந்த நீதித்துறை முறைமைகளிலும் ஒற்றுமைகள் உள்ளன.

ஆனால் அந்த மாதிரிகள் பின்னர் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் வேறொரு நாட்டிற்கு அனுப்பப்பட்டன, மேலும் இந்த எச்சங்கள் 1950 களுக்கு முந்தையவை என்று தெரிவிக்கிறது. இதனால், வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

இந்த வழக்குக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரங்கள் இன்னும் அப்படியே உள்ளன. இந்த பிரமாணப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு என்ன நடந்தது என்று சிஐடி விசாரிக்கவில்லை. இந்த 78 நபர்கள் எங்கே என்று விசாரிக்க அரசு விசாரணையைத் தொடங்கவில்லை. இந்த சம்பவங்களைச் செய்தவர்கள் நிர்வாகத்தின் ஒரு பகுதியினர்.

நிர்வாகத்தினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீதிவான் விசாரணைக்கு உத்தரவிட்டாலும், விசாரணை அதிகாரம் நிர்வாகத்தின் ஒரு பகுதியாகும். எனவே விசாரணை ஆணைக்குழு சுதந்திரமானது அல்ல. இந்த மாதிரியான விசாரணையை நடத்தி குற்றவாளிகளை அடையாளம் காணும் விருப்பமும் தேவையும் அரசுக்கு இருக்க வேண்டும்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்களுக்கு மக்களுக்கு நீதி வழங்குவதில் விருப்பம் இல்லாமை தெரிகிறது. மனிதப் புதைகுழிகள் தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் மருத்துவமனைகளின் கீழ் புதைக்கப்பட்டுள்ளன என்று குமரப்பெரும கூறினார்.

முடிவில், இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கு விசேட நடைமுறைச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என குமரப்பெரும கருத்து தெரிவித்துள்ளார். இல்லையெனில், இந்த குற்றவாளிகளை ஒருபோதும் சட்டத்தின் முன் நிறுத்த முடியாது, என்று அவர் கோடிட்டுக் காட்டினார்.



கார்த்திகை



# சினம் கொள்!!

இவர்கள்
பௌத்த தர்மத்தை
கடைப்பிடிப்பவர்கள்.
காலையில்
தலைக்குக் குளித்து,
வெள்ளுடை தரித்து,
தாமரை சுமந்து
புத்தரின் பாதங்கள்
பணிந்து கிடப்பவர்கள்.

இவர்களுக்கு
இன்னொரு முகமிருக்கிறது..

புத்தரின் எட்டுப் போதனைகளில்
முதன்மையானது
கொல்லாமை!
கிலோ என்ன விலை என்பார்கள்
தமிழினத்தைக் கண்டால்!!

கொல்வதற்கு முன்
நிர்வாணமாக்கி ரசித்து
தம் வக்கிரங்களை
தீர்த்துக் கொள்பவர்கள்

எந்த இனத்திலும்
பெண்ணின் பிறப்புறுப்பு
வேறுபடுமா என்ன?

தாய்க்கும் தாரத்துக்கும்
வேறுபாடில்லாமல்
பலநூறு தமிழ் மாதரை
கூட்டாகப் புணர்ந்த
காமுகர் இவர்கள்!!

எம்மவர்
சிறுகச் சிறுக
சேமித்த சொத்துகள்,
பார்த்துப் பார்த்து
கட்டிய வீடுகள்,
அடித்தளத்தில் ஆரம்பித்து
அமோகமாய் வளர்ந்த
அங்காடிகள்- என்று
தேடிக் கொழுத்தி
கும்மாளமிட்டவர்கள்.

இவர்கள்
சிங்களர்!
பல தசாப்தங்களக
தமிழின வெறுப்பும்
பௌத்தம் என்கிற மதவெறியும்
ஊட்டி வளர்க்கப்பட்டவர்கள்.

வெட்டியெறிந்தால்.
எந்த உடலிலும்
செந்நீர்தான் சீறும்
சாக்கடை ஓடியதாக
சரித்திரமில்லை..!

இவர்கள் அருவருப்பானவர்கள்!
கொலைவெறிப் பாதகம்
கொஞ்சமா புரிந்தார்கள்?

நாற்பது வருடங்கள்
கடந்து போயின.
கறுப்பு ஜூலையின்
கசப்பான நினைவுகள்
எமைத் துரத்தும்!! வருத்தும்!!

பட்டினியும் பிணியும்
நாளாந்த சித்திரவதையும்
தாங்கிய நடைப்பிணங்களாக
கம்பிகளின் பின்னே
வருடங்கள் பலவிருந்த
தமிழ் அரசியற் கைதிகள்!
என்ன பாவம் பண்ணினார்கள்?

தமிழர் இருந்த
சிறையின் கதவுகள்
அரச உத்தரவுடன்
திறந்து வைக்கப்பட்டனவாம்



# சினம் கொள்!!

விழிகள் பிடுங்கப்பட்டு
புத்தர் சிலைக்கு படையல்
வைக்கப்பட்டதாம்!
சுதந்திரத்தைப் பார்க்க
துடித்த கண்கள் இவையென்று
காலால் நசுக்க முன்
கொக்கரித்தார்களாம்!

வெட்டியும் அடித்தும்
குத்தியும்
நகங்களைப் பிடுங்கியும்
என்று சொல்லவியலாத
சித்திரவதைகள்..
முடிவில்,
குற்றுயிராக கிடந்தவர்
ஆண் உறுப்புகளையும்
அறுத்து எறிந்தனராம்.

நெஞ்சம் பதைக்க வைத்த
சிறைப் படுகொலைகள் இவை.
வஞ்சகர் இவர் தாகம்
தணியவில்லை இன்னும்.

நம் நடு வீட்டில் உட்கார்ந்து
'பிரித்' ஓதுறார்.
கண்டவர் எல்லோரையும்
காணாப் பிணம் ஆக்கிறார்.

எங்கு தோண்டினாலும்
உடலின் எச்சங்கள்!
எந்த நாளும்
இனவழிப்பின்
ஏதோவொரு நினைவுநாள்!
வெந்து தணிந்த உடலங்கள்
சுடுகாடாய்ப்போனதுஎங்கள்
தாய்மண்!!

இப்போ..
பட்டுப்பாதைகள் சுற்றி விரிக்கலாம்
பூச்சுப் பூசி ஓட்டையை மறைக்கலாம்
சிங்கார நாடாக ஜொலிக்குது பார்
என்று
பெருமைகள் பீத்தலாம்..

அடி ஆழத்தில்
பல இலட்சம் தமிழனின்
செந்நீர், அவன் உழைப்பு,
அவன் உயிர், உடமை
அதையும் கடந்து
விதையாக விழுந்து
விழுதாக நிற்கும்
எமது செல்லங்கள்!!

இவை ஏதும் அறியாது
கனவிடை வாழும் இளையோர்!
அவர்க்கு எமது
வரலாறு தெரிய வேண்டாமா?
தங்கமுலாம் பூசப்பட்ட
இனவழிப்பு பொறியின் கீழ்
அவர்கள் வாழ்வது
அவர்க்கு தெரியவர வேண்டாமா?

வலிகளை நாங்கள் மட்டும்
சுமத்தல்போதாது..
சந்ததிக்கும்கடத்துவோம்..!
உள உறுதியுள்ள
இனத்தை படைப்போம்!!
தமிழினம் தலைநிமிர
சினம் கொள்..! தப்பில்லை..!



# ‘மாமன்னர்’களின் வலிகள்: இலகுவாக கடந்துவிட முடியுமா?



அருண் செல்வராஜ்

**மாரி** செல்வராஜ் எனும் ஒரு இயக்குனர் இன்று ஒட்டுமொத்த தமிழ் சினிமா உலகமும் வியந்து பார்க்கும் படைப்புகளை தந்து கொண்டு இருகிறார். சமகாலத்தில், தான் சாதிய ரீதியாக அனுபவித்த கொடுமைகளையும், வலிகளையும், வேதனைகளையும் எல்லோரும் தெரிந்துகொள்ளட்டும் என்றும் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ எனும் கருவை மையமாக கொண்டு தனது படைப்புக்களை தருகிறார்.

இன்னமும் சாதியம் இருக்கிறதா? என்றோ நடந்த ஒன்றை இன்று எடுத்துக்காட்டி தேவையற்ற சாதிய தீண்டாமையை மக்கள் மத்தியில் விதைக்கிறார்கள், நசுக்குதல், பிசுக்குதல் இன்னமும் உண்டா என்று பலரும் பல்வேறுபட்ட வாத விவாதங்களை முன்வைக்கிறார்கள்.

ஒன்று அவர்கள் வெறுமனே கிணற்று தவளைகள், மற்றையது எல்லா உண்மைகள் தெரிந்தும் தான் வேஷம் போடுகிறார்கள் என்பதை தாண்டி ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை .



சமகால கதைகள் இன்னமும் எத்தனையோ வேதனை நிறைந்த கதைகளையும், வலிகளையும் சுமந்து கொண்டு இருக்கிறது என்றால் யாராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். தமிழ் நாட்டில் சாதிய பாகுபாடுகள் வேரூன்றி தலைவிரித்து ஆடுகிறது என்பதற்கு ஆயிரம் ஆயிரம் உதாரணங்கள் இருக்கிறது.

அந்த அவமானங்களும், வலிகளும் ஓராயிரம் மாரி செல்வராஜ்கள் சுமந்து கொண்டு தமிழர்கள் எங்கெல்லாம் வாழுகிறார்களோ அங்கெல்லாம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இங்கே ஒரு வாதம் சொல்லப்படுவது உன்னை யார் தாழ்ந்தவன் என்று சொல்கிறார்கள் , நீயே உன்னை உயர்ந்தவன் என்று சொல்லிகொள் என்பதாகும். இங்கே மாரி செல்வராஜின் கருத்து என்பது உயர்ந்தவன் என்று ஒன்று இல்லை எல்லோரும் சமம் என்பதாகும்.

இன்னும் தமிழ் நாட்டில் இரட்டை குவளை முறை, கோயில் உள் நுழைதல், தனிக்கிணறு, தனிப்பாதை, என இன்னமும் சாதிய தீண்டாமைகள் இருக்கத்தானே செய்கிறது. அதில் ஒருவன் பாதிக்கப்பட்டால், அதன் வலியை வெளியே கூட சொல்ல கூடாது என்று ஒரு கூட்டம் கிளம்பி இருப்பது எந்தவகையில் நியாயம் ஆகும்?

நான் என்ன துயரம் அடைந்து, வெகு நாட்களாக தூங்காமல் அலைந்து, அந்த அவமானங்களை எல்லாம் வெளியே கூட சொல்லிக்கொள்ள முடியாமல் வாடி, ஒரு நாள் அது பூகம்பமாக எவ்வாறு வெளியே வரும் என்றால் இதோ இந்த மாமன்னனாக வரும். வலியை கொடுக்கும்போதும் சுயசாதி பெருமையை பிறருக்கு திணிக்கும் போதும் வராத அறிவு, ஒருவன் இந்தளவு பாதிக்கப்பட்டு இருக்கான், இந்தளவு வலி வேதனைகளை கடந்து வந்திருக்கான் என்று சமுகத்



துக்கு காட்டும் போது மட்டும் எவ்வாறு சாதிய வேற்றுமைகள் வருகிறது தெரியவில்லை.

ஒருவன் முன்னே அமருவதும், கை கட்டி இருக்க வேண்டும் என்பதுவும், வீட்டை தாண்டும் போதும் குனிந்து செல்ல வேண்டும் என்பதுவும் எல்லோருக்கும் சமம் எனும் ஒரு விடயம் ஒருவருக்கு மட்டும் கிடைக்காமல் போவதுவும் எல்லாம் அதனை கொடுப்பவருக்கு சிறிய விடயமாக இருக்கலாம். ஆனால் அதை அனுபவிப்பவருக்கு அது மரண வலியை தரும் என்பதை சொல்லுவதற்கு ஆயிரம் மாரி செல்வராஜூக்கள் இந்த சமூகத்துக்கு தேவைப்படுகிறார்கள்.

இங்கே உயர்வு என்பது யாது எனில் கல்வியால், திறமையால் மட்டுமே வருவதன்றி, வெறும் பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவது எவ்வாறு உயர்வாக முடியும். சமூகத்தில் ஒரு எழுத்தை கூட வாசிக்க தெரியாதவன், சமூகத்தில் கறைபடிந்த வரலாற்றை கொண்டவன், சமூகத்தில் வாழவே தகுதியற்றவன் எவ்வாறு உயர்வு பெறுகிறான் என்றால், தான் இந்த சாதி என்பதால் மட்டுமே ஆகுமென்றால் அந்த உயர்வு என்பது வெறுமனே கால் தூசிக்கு சமமான ஒன்றாகும் .

இதையெல்லாம் தாண்டி உங்களுக்கு சாதிய கர்வம் முக்கியம் என்றால் இருந்து விட்டு போகட்டும். ஆனால் தன்னை உயர்த்த பிறரை தாழ்த்த வேண்டாம் என்பதே முடிவான வாதமாகும்.அதற்கென்ன நீ உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ள வேண்டியதுதானே என்றால் வெறுமனே பிறப்பில் உயர்வை தீர்மானிக்க நிச்சயமாக மனநோயாளிகளாக மட்டுமே இருக்க வேண்டும். தவிர்த்து,கற்ற அறிவுள்ள ஒருவனின் சமநிலை வேறு விதமாக இருக்கும். தேவர் மகன், சின்ன கவுண்டர்என சாதியத்தை போற்றிய படங்கள் வந்த காலகட்டத்தில் 'எஜமான் காலடி மண்ணெடுத்து நெத்தியில வச்சுக்குவோம்' என்று பாடிக்கொண்டு கைகட்டி இருக்கிற ஒரு கூட்டத்தில் இருக்கிறவனுக்கும் கதை உண்டு. வரலாறு உண்டு. வலி உண்டு. பாடல் உண்டு.வாழ்க்கை உண்டு என்று சொன்னால் அது பரியேறும் பெருமாளாக வெளியே வரும். அது கர்ணனாக வெளியே வரும். மாமன்னாக வெளியே வரும். அதை பார்த்துக்கொள்ளவும் பொறுத்துக்கொள்ளவும் சகித்துக்கொள்ளவும் கூடவா தன்னை உயர்ந்தவர்கள் என்று சொல்பவர்களுக்கு தெளிவு இல்லை என்பதே கேள்விக்குறி.

கல்வியால் முன்னேற வேண்டிய சமூகம், திறமையால் முன்னேற வேண்டிய சமூகம், வெறும் சாதியால் அழிந்து போவது வேதனைக்கு உரிய விடயமாகும். வரலாறுகள், சாதியம் எல்லோருக்கும் கறுப்புப்பக்கங்களை தந்து உள்ளது. பல இரத்த வரலாறுகளை தந்து உள்ளது. ,அப்படி இருந்தும் எந்த ஒரு புரிதலோ அல்லது அடிப்படை விளக்கமோ அல்லது வரலாற்று சான்றுகளோ இல்லாமல், யாரோ சுயலாபத்துக்காக சொன்ன வாய்வழி கதைகளை நம்பிக்கொண்டு ஒரு மூடர் கூட்டம் திரிகிறது என்றால் அது தமிழர்களை விடவும் வேறு யாரும் இருக்க முடியாது.

இந்த உலகில் உயர்வு தாழ்வு என்று எதுவும் இல்லை.'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனும் அடிப்படையில் மண்ணில் பிறந்த மனித உயிர்களை மதத்தாலோ, இனத்தாலோ, சாதியாலோ தாழ்ந்தவன் என்று சொல்வதற்கு இல்லை. எல்லோரும் சமம். திறமை, கல்வி, நல் ஒழுக்கம் அடிப்படையில் மனிதன் உயர்ந்தவன் ஆகிறானே தவிர்த்துவேறு ஏதேனும் காரணங்கள் இருக்க கூடாது என்பதே சமத்துவ கொள்ளகையின் வெளிப்பாடு ஆகும்.

இளைய சமூதாயம் எல்லாம் விட்டு வெளியே வந்து கொண்டிருக்கிறது என்பது உண்மையே. ஆனாலும் சமுகத்தில் புரையோடிப்போன சில விஷ செடிகள் இளைய சமூகத்தை வளரவிடாமல் தடுத்து விடுகின்றனர். அவர்களை தாண்டி வெளியே சிந்திப்பது என்பது பெரிய சவாலான விடயமாகும். இனி சரி சரிநிகர் சமூகமாக மாற நாளைய தலைமுறை சிந்திக்கட்டும். இல்லை என்றால் ஆயிரம் மாமன்னர்கள் வீர நடை போட காத்து இருக்கிறார்கள் .



# நட்பு!!

தோழி.!!
புத்தகத்தில்
மறைத்து வைத்த
மயிலிறகு
குட்டி போடும்
என்ற
காலம் முதல்..
தலையெல்லாம்
மை தடவி
இளமையாக்கி
எழில் கொஞ்சும்
காலம் வரை..
நீயும் நானும்
அழகாய் அறிந்த
வார்த்தை
நட்பு.

கடலைக் கூட
கடக்கலாம்
கடல் நீர் படாமல்.
ஆனால்.
ஒரு பொழுதும்
கண்ணீர் படாமல்
வாழ்க்கையைக்
கடந்து விட
முடியாது!!

என்
தலையணைக்குக் கூட
தெரியாது
என் கண்ணீரின்
அளவு.
என் கைகுட்டைக்கு
கூட
தெரியாத
விழியின் வலி.

அனைத்தையும் அறிந்
தவள் நீ!
நீ மட்டுமே!!

நான் தோற்றுப்போன
பொழுதுகளிலெல்லாம்
தோள் கொடுத்தவள்
நீ!

என் விழி நீரை
துடைத்த
உன் விரல்கள்கூறும்
நம் நட்பின்
ஆழத்தை!!

என் முதுகின் பின்னே
தெரியும்
என் வெற்றி அது
நீ அளித்த பரிசு.

வள்ளலாரின் வரிகள்
போல்
நான் வாடிய போது
நீயும்வாடினாய்.


பஞ்சுக் காய்கள்
வெடித்து
பறப்பதை போல்
நாம் பறந்த காலம்
ஒன்று உண்டு.

தெய்வத்திடம்
நான் வேண்டும்
ஒரேயொரு
வேண்டுதல்.
நாம் சுவாசிக்கும்
காலம் வரை
நம் நட்பு தொடர
வேண்டும்.
தொடர்ந்திட
வேண்டும்.

முல்லை பாஸ்கர்

கொற்றவை

அங்கம்: II



# வலை

எவ்வளவுதான் அசதியுடன் படுக்கையில் சரிந்தாலும் மனதின் குழப்பங்களும் அன்றைய தினத்து நிகழ்வின் தாக்கமும் ஆனந்தனுக்கு சரியான தூக்கத்தைத் தரவில்லை. விடியும்வரை அப்படியும் இப்படியுமாகப் புரண்டு புரண்டு படுத்தான். எப்பொழுது உறங்கினான் என்று தெரியவில்லை. கோழி கூவியது.

எழுந்து வெளியில் வந்தான். குளிர்ந்த காற்று முகத்தில் அறைந்தது. கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டான். அவன் எழுந்து வெளியிற் போனதைப் பார்த்த சாந்தியும் எழுந்து கொண்டாள். அவிழ்ந்து கிடந்த கூந்தலை வாரி கொண்டை போட்டபடி,

‘‘ஏனப்பா...! உடம்பு கிடம்பு சரியில்லையே.? ராவுராவா புரண்டு புரண்டு படுத்தியள்....’’

‘‘சீச்சீ! அதெல்லாம் ஒண்டுமில்லை. என்னவோ நித்திரை வரமாட்டன் எண்டுது.... அதுசரி, அப்ப நீயும் நித்திரை கொள்ளாமல் என்னையோ பாத்துக் கொண்டிருந்தனீ?’’





லாந்தரை எடுத்துக்கொண்டு ஆட்டுக் கொட்டிலுக்கு வந்தவள்,

‘‘இல்லை... நான் கண்ணை முழிக்கிற நேரமெல்லாம் நீங்கள் முழிச்சுத்தான் இருந்தனியள்.... அதுதான் கேட்டனான்...’’ தணிந்த குரலில் பதிலளித்தாள் சாந்தி.

கறந்த பாலைக் காய்ச்சிப் போட்ட தேநீரின் மணம் அந்த இடத்தை நிறைத்தது. வெண்ணிலாவை எழுப்பி அவளுக்கும் ஒரு தம்ளர் தேநீர் கொடுத்து அவளைப் படிக்க விட்டுவிட்டு, குவளை தேநீருடன் ஆனந்தனுக்குப் பக்கத்தில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தாள் சாந்தி. அருகில் மனைவி. இதமான சூட்டில் அருமையான நேநீர். காலைப்பொழுது ரம்மியமாக இருந்தது ஆனந்தனுக்கு.

கிழக்கு வெளிக்கத் தொடங்கி விட்டது. அக்கம் பக்கத்திலும் ஆட்கள் எழுந்து விட்டார்கள் போலும். எங்கோ மாடு ஒன்று ‘ம்மா.’ என்று கூப்பிடும் சத்தம், பறவைகளின் கதம்பமான பாட்டு, தெருவில் போகும் ட்ரைக்டரின் ஒலி, நாயொன்றின் குரைப்பு என்று ஊர் விழித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டது.

வெண்ணிலா வெளியில் வந்தாள். கையில் ஆனந்தனின் ஃபோன் இருந்தது.

‘‘அப்பா! உங்களுக்கு மெசேஜ் ஒண்டு வந்திருக்குது... இங்க பாருங்கோ எந்த வேலைக்கு வெள்ளன வெளிக்கிட இருந்தனீங்கள்...? இண்டைக்கு வர வேண்டாமாம்...’’

மண்டிக்காரர்தான் இரண்டு நாட்களுக்கு வரத் தேவை



யில்லை என்று தகவல் அனுப்பியிருந்தார்.

''முதலே தெரிஞ்சிருந்தால் இன்னுங் கொஞ்ச நேரம் நீங்கள் படுத்திருக்கலாம்.'' ஆதங்கத்துடன் சொன்னாள் வெண்ணிலா.

''நல்லதாப் போச்சு. காணி துப்பரவாக்க எல்லாரும் வெள்ள னவே போடுவினம். எனக்குத்தான் பிந்தப்போகுது எண்டு நினைச்சன்...''

சொல்லியபடி துரிதமாக புறப்படும் ஆயத்தங்களில் இறங்கி னான் ஆனந்தன்.

காணிக்காரர் ஒரு சிறியரக வான் வைத்திருந்தார். ஆட்க ளையும், துப்பரவு செய்யத் தேவையான உபகரணங்களையும் அவரே கொண்டுபோய் இறக்கினார்.

''கொஞ்ச நேரத்தாலை சாப்பாடு, தண்ணிவென்னி எல்லாம் வரும். மனம் வைச்சுச் செய்யுங்கோ. கடவுள் புண்ணியத்தில இத்தினை வருசம் கழிச்சு இப்பான் விட்டி ருக்கிறாங்கள்.... கெதியில நாங்கள் எங்கடை இடத்துக்கே போயிடவேணும்....'' என்றார்.

பலாலி இராணுவ முகாமை அண்மித்த பிரதேசம் அது. காடு பத்திப்போய் கிடந்தது. ஊரில் நடமாட்டம் எதுவுமில்லை. நிசப்தமாக இருந்தது. எங்கோ சில்வண்டுகள் கத்தும் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. சற்றுநேரத்தில் பாட்டுப் போல ஒரு சத்தம் எங்கோ தூரத்தில் கேட்டது. உற்றுக் கேட்க, 'பிரித்' ஓதும் சத்தம் என்று தெரிந்தது. ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள்.

''அறுவார்! இங்கினையும் எங்கையோ விகாரை கட்டிப் போட்டாங்கள் போலை.'' ஆனந்தனுடன் வந்திருந்தவர்களில் ஒருவர் மனது பொறுக்காது சபித்தார்.

பலபலவென்று பொழுது விடிந்ததும்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடிந்து கிடந்த கட்டடங்கள் தென்பட்டன. காணிக்காரர் சிறுவயதாக இருந்தபோது அவருடைய வீடு புதி தாகக் கட்டி குடிபுகுந்து மூன்று மாதங்கள் ஆகவில்லையாம் அதற்குள் ஓடிப் போக நேர்ந்ததாம். இத்தனை வருடங்களின் பின்னர் இப்போதான் சொந்த வீட்டைப் பார்க்கக் கிடைத்தது அவருக்கு.

மேற்கூரை எதுவுமின்றி அம்மணமாக இருந்தது வீடு. கட்ட டங்களில் பாய்ந்திருந்த சன்னங்களின் தொகையும், ஷெல்லடி யால் இடிந்து விழுந்திருந்த வீட்டின் ஒரு பகுதியும், ஷெல்களின் சிதறல்களால் சுவர்களில் ஏற்பட்டிருந்த காயங்களும் வீட்டில் இருந்திருந்தால் அவர்களின் கதி என்ன என்பதை எடுத்துச் சொல்லின.

காணிக்காரர் தனது வளவை மட்டுமல்லாது விடுவிக்கப்பட்ட ஊரின் பிற பகுதிகளையும் துப்பரவாக்கும் ''கொன்றாக்ற்'' உடன்தான் அவர்களைக் கூட்டி வந்திருந்தார். இடம்பெயர்ந்து போன பலர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்கள். அதனால் இந்த முறையில் துப்பரவு செய்வித்து தத்தமது காணிகளைப் பாதுகாப்பது அவர்களுக்கு இலகுவாக இருக்கும்.

''கண்ணிவெடி ஏதேனும் கிடக்குமோ?..., கையைக் காலைக் கொண்டு போயிடும்....'' ஒருவர் பயந்தார்.

''இல்லை! இது முழுசா கிளியர் பண்ணின இடந்தான் பயப்படத் தேவையில்லை.''

ஆனந்தனின் மனநிலை வேறாக இருந்தது. இந்த இடம் இராணுவத்தினரின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த இடம். இந்தப் பகுதியினூடாக இராணுவ முகாமை வேவு பார்க்கும் பணியில் அவன் பல மாதங்களைச் செலவு செய்திருக்கிறான். ஒரு பத்துப் பதினைந்து நாட்கள் அந்தப் பகுதியை முழுதாக அவதானிப்பார்கள். மறுபடியும் சில நாட்கள் கழித்து வருவார் கள். கிடைத்த சந்து வழியாக இராணுவ முகாமினுட் புகுந்து, அவர்களிடத்திலேயே தங்கி வேவு பார்த்ததை அவனால் மறக்க முடியாது.

அது ஒரு திகிலுடன் கூடிய ஆர்வமூட்டும் அனுபவம். கரணம் தப்பினால் மரணம்தான். அது ஒரு கூட்டு வேவு. ஒரு வர் சற்றுக் கவனக் குறைவாக இருந்தாலும் எல்லோருக்கும் ஆபத்து. சரியான தகவல்களைத் திரட்டாவிட்டால் அவர்கள் கொடுக்கும் தகவல்களை நம்பி அந்தவழியால் சண்டைக்கு இறங்கும் அத்தனை உயிர்களும் பலியாகிவிடும்.

மிகக் குறைந்த பொருட்களுடன் தப்பி உயிர்வாழும் கலை யில் தேர்ந்தவன் ஆனந்தன். இந்த இடிந்த கட்டடங்களினுள் எத்தனை இரவுகளை அவன் கழித்திருக்கிறான். ஒரே கட்டடத் தில் அவர்கள் தங்குவதில்லை. இடத்தை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். தடயம் எதையும் விடாது நகர்ந்து திரிவது என்பது லேசான விடயமல்ல. கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் ஷெல்களாலும் துப்பாக்கிச் சன்னங்களாலும் இந்த இடத்தை சல்லடையாக்கி விடுவார்கள்.

ஆபத்துக்கு மிக அருகில் பதுங்கி இருக்க வேண்டிய நேரங் கள் நிறைய இருந்தன. ஒரு தடவை.. இவனும் ஒரு தோழனும் மட்டும் தனியாக இந்தப் பகுதியில் அகப்பட்டு விட்டார்கள். இராணுவத்தினருக்கும் இந்தப் பகுதியில் யாரோ வந்து போகி றார்கள் என்ற சந்தேகம் எழுந்ததோ என்னவோ திடீரென்று ரோந்து வந்துவிட்டார்கள்.





ஆனந்தனின் குழுவில் இருந்த மற்றவர்கள் பிரதான இராணுவ முகாமினுள் பாதுகாப்பாக நுழைந்து விட்டார்கள். இவனும் தோழனும் மட்டும் பாதுகாப்புக்காக வெளியே தங்க வேண்டியிருந்தது. கொண்டுவந்த உணவுப் பொருட்களும் தண்ணீரும் தீர்ந்து விட்ட நிலையில் கைவசமிருந்த ஒன்றிரண்டு பிஸ்கட்டுகள் மட்டுமே உணவு. எப்படி அயர்ந்தார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் மிக அருகில் வந்துவிட்டார்கள். ஒரு இராணுவத்தினனின் ‘வோக்கி ரோக்கி’ யின் இரைச்சல்தான் அவர்களுக்கு சரியான நேரத்தில் எச்சரிக்கை தந்தது.

உடனேயே மறைவான இடத்திற்குப் பாய்ந்து நிலையெடுத்து விட்டார்கள் ஆனந்தனும் அவனின் நண்பனும். ‘பயொனெற்’ எனப்படுகின்ற கத்தியை அந்த இராணுவத்தினனின் கழுத்தை அறுக்கத் தயார் நிலையில் வைத்திருந்தான் ஆனந்தனின் தோழன். அவசரப்படக் கூடாது. உள்ளே சென்றவர்களுக்கு அது ஆபத்தாக முடிந்துவிடும். இதைவிட இனி வேறு வழியில்லை என்ற நிலைமை எழும்போதுதான் இப்படியான யுக்தியைப் பயன்படுத்த வேண்டும்.

அவர்கள் பயந்தது போல எதுவும் நடக்கவில்லை. இராணுவத்தினர் இலக்கற்ற ஒரு ரோந்து வந்திருக்கிறார்கள். அருகில் யாரோ பதுங்கியிருக்கிறார்கள் என்ற சந்தேகம் துளியும் அவர்களுக்கு இருக்கவில்லை. தனது பள்ளித் தோழி பற்றி ஒருவன் சொல்ல சிரித்துப் பேசியவாறு முகாம் பக்கமாகப் போய் மறைந்தார்கள் இராணுவத்தினர். இது அன்று அவர்களுக்குக் கிடைத்த பெரிய பாடம். அன்றிலிருந்து ஆனந்தன் தனது கவனத்தைச் சிதற விட்டதேயில்லை.

‘இதற்குக் கிட்ட ஒரு வைரவர் கோவில் இருந்ததே.! இப்பவும் இருக்குமா?’

பற்றைகளை விலக்கிக் கொண்டு யோசனையுடன் நடந்தவனை ‘டிட்டிட்டூ..டிட்டிட்டூ.’ என்று திடீரென எழுந்த அலறல் சத்தம் தூக்கிவாரிப்போட வைத்தது. காணியடியில் நின்றவர்களும் பதறிப் போனார்கள்.

‘‘என்ன தம்பி...? ஏதும் பிரச்சனையோ....?’’ ஓடி வந்தார்கள் அவர்கள்.

‘‘நானும் திடுக்கிட்டுப் போனன். அது ஆக்காட்டிக் குருவி. என்னைக் கண்டு அதுகும் பயந்திட்டுது போலை.’’

‘‘செம்மூக்கன்.... அதுதான் உப்பிடி அலறி ஊரைக்கூட்டும். உதுகள் தண்ணியள், தேக்கங்களுக்குப் பக்கத்திலயல்லோ இருக்கிறது என்கிறவை.’’

‘‘இங்க பக்கத்தில ஒரு சின்ன வைரவ கோயில் இருந்தது. அதுக்குக் கிழக்காலை சின்னக் குளம் ஒண்டு இருந்தது. அதிலை தண்ணீ இருக்கோ என்னவோ.’’ ஆனந்தன் பதிலளித்தான். அவரவர் தங்களுடைய வேலையைப் பார்க்கப் போய்விட்டார்கள்.

இன்னமும் செம்மூக்கு ஆட்கட்டியின் கோபம் அடங்கவில்லை. சத்தமிட்டபடி தலைக்கு மேல் வட்டம் போட்டது அது.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் அவனது விஞ்ஞான வாத்தியார் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

‘‘டிட்டிட்டூ என்கிறதை வடிவாக் கேளுங்கோ... அது did you do? என்கிறது மாதிரிக் கேட்கும்.’’

இப்பவும் அப்படித்தான் கேட்கிறதோ என்னவோ.... கைகள் வேலையில் ஈடுபட்டிருந்தாலும் மனம் அவனின் கட்டுப்பாட்டை இழந்து தாவிக்கொண்டிருந்தது.

இந்திய இராணுவ காலப்பகுதியில் அவன் அளம்பில் காட்டுப் பகுதியில் இருந்தான். அங்கு இந்த வகை ஆட்காட்டிகள் ஏராளம். இராணுவத்தினருக்கு சந்தேகம் எழுப்பாமல் நடமாடுவது ஒரு புறம், இந்த ஆட்காட்டிகளை அச்சுறுத்தாமல் நடமாடுவது என்பது கடினமான கலை. கொஞ்சம் அசந்தால் போதும். அலறியடித்து, இருக்குமிடத்தைக் காட்டிக் கொடுத்துவிடும்.

‘அது கரடி நடமாடும் பிரதேசமாக இருந்ததோ நாங்கள் தப்பித்தோமோ...’

என்று எண்ணுகையில் ஒருபுறம் சிரிப்பும் எழுந்தது.

காய்ந்துபோய் கிடந்த நிலத்தில் பற்றைகளை வெட்டித் துப்புரவாக்குவது இலேசான காரியமாக இருக்கவில்லை. பாதைகள் இருந்த இடங்களிலும் தடித்தடியாக மரங்கள் முளைத்து ஒரு சிறு காடுபோல ஆகிவிட்டன. கொண்டுவந்த மண்வெட்டி, பிக்கானும் மழுங்கிப் போய்க்கிடந்தன. நெஞ்சு நோக நோகக் கொத்தினான் ஆனந்தன். வெக்கை தாங்க முடியாமல் வேர்த்து ஊற்றியது. பூச்சிகளும் கடித்து பாடாய்ப் படுத்தின. தாகமாக இருந்தது. சாப்பாடு கெதியில வந்தால் நல்லாயிருக்கும்

வீட்டிலிருந்து வெண்ணிலா ஃபோன் பண்ணினாள். என்னவோ ஏதோ என்று மனம் துணுக்குற்றது. இந்தக் கிழமை அவள் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை. சோதனை நடக்கவிருப்பதால் வீட்டிலிருந்து படிக்க விட்டிருக்கிறார்கள்.

‘‘அப்பா..!! முறிஞ்சு வேலை செய்யாதேங்கோ.... காலமையும் நீங்கள் சாப்பிடாமப் போட்டியள். ஏதும் சாப்பிடுங்கோ அப்பா..!’’

‘‘இந்தா...!! இப்ப சாப்பிடப் போறன்.... வேலை கஸ்ரமில்லை.... நீ நல்லாப் படி... அம்மா என்ன செய்யுறா?’’

‘‘அவ வளவுக்கை நிக்கிறா... அப்பா...!! நான் சொன்னது எண்டு சொல்லாதையுங்கோ.... அம்மா தாண்டித் தாண்டி நடக்கிறா. கால் நோகுதோ தெரியேல்லை....’’ கொஞ்சம் கவலை தொனித்தது அவள் குரலில்.

‘‘ஆ... சரி....! நான் வந்து பாக்கிறன்...’’


வெண்ணிலா தாயிலும் தகப்பனிலும் உயிராக இருந்தாள். தான் படிச்சு ஒரு நல்ல வேலை எடுத்ததுக்குப் பிறகு வேலைக்குப் போகக்கூடாது என்று முடிவாகச் சொல்லிவிட்டாள். என்ன ஒரு பாசமான பிள்ளை. மகளைப்பற்றி நிறைவாக நினைத்துக் கொண்டான் ஆனந்தன்.

வாகனத்தின் இரைச்சல் கேட்டது. சிறிது நேரத்தின் பின்...

‘‘மச்சான்..!! சாப்பாடு வந்திரிக்கு..... வாடாப்பா....’’ அடுத்த காணியில் இருந்து யாரோ கூப்பிட்டார்கள்.

நன்கு பழகிய ஒரு குரல். யாராக இருக்கும்....?

தொடரும்.....



# நம்பிக்கை

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் நடந்த சில தவறுகளால் 50 கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டு விட்டது.மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார் அவர்.

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு,

‘‘ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார்.

அதற்கு இவர் ‘‘எனது தொழிலில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன்.’’ என்றார்.

‘‘எவ்வளவு ரூபாய் நஷ்டம்?’’ என்றார் அவர்.

‘‘50 கோடி ரூபாய்’’ என்றார் இவர்.



‘‘அப்படியா? நான் யார் தெரியுமா?’’ என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார்.

அசந்து போனார் இவர்...

‘‘சரி! 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?’’ என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர், ‘‘ஆமாம்! எல்லாம் சரியாகி விடும்!’’ என்றார்.

பின், அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி

‘‘இந்தா! இது 500 கோடிக்கான செக். நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன்.எல்லாவற்றையும் சமாளி. ஆனால், சரியாக ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்’’

என்று சொல்லி செக்கை இவர் கைகளில் திணித்து விட்டு சென்றார் அவர்.

உற்சாகமடைந்த அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக தனது அலுவலகத்திற்குச் சென்றார்.

தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களையும் நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார்.

ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார்.

‘‘நண்பர்களே!! நமது நிறுவனத்தில் 50 கோடி ரூபாய்கள்



நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது.எனினும் அந்த பணத்தை நான் தொட மாட்டேன்.''

''இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது ? எதனால், ஏதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதைக் களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன.தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட்டன. மிகச் சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார்.

அவருடைய பேச்சு, மூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலைப் பற்றியே இருந்தது.மிகச் சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன.

சரியாக 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது



அவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிய காலை நிறுவனத்தின் தலைவர் அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்தப் பூங்காவிற்கு விரைந்தார்.

சென்ற வருடம் அமர்ந்த அதே சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து, தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண் மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது.

சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரைக் காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம், ''எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?'' என்றார்.

அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் ''உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?'' என்றார்.

இவர் ''இல்லை அம்மா! ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?'' என்றார். அந்த பெண்மணி ''இல்லை அய்யா! அவர் ஒரு புத்தி தடுமாறியவர். அதாவது மனநிலை சரி இல்லாதவர். செக் தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார். என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவனத்தின் தலைவருக்கு பேச்சு வரவில்லை.

அப்போ!! நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும்.

அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால்

'எந்த ஒரு விஷயமும் நம்மால் முடியும்என்று முதலில் நாம் நம்பவேண்டும்.'

அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

# ஒரு குட்டிக் கதை

## தன்வினை தன்னைச் சுடும்

ஒரு கிராமத்தில் கந்தசாமி என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் வீட்டுத் தோட்டத்தில் ஒரு முருங்கை மரம் இருந்தது. வாரம் ஒரு முறை முருங்கை காய்களை பறித்து, பையில் நிரப்பி, தோளில் வைத்துக்கொண்டு ஒன்பது கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் நகர் வரைநடந்தே சென்று... வழமையாகக் கொடுக்கும் ஒரு பலசரக்குக் கடையில் விற்றுவிட்டு வருவது அவரது வழக்கம்.

முருங்கைக் காயைக் கொடுத்து விட்டு அதற்கு பதிலாக அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி வருவார் அவர். கந்தசாமி கொண்டு வரும் முருங்கைக்காயின் சுவை அந்த பகுதி மக்களிடையே மிகவும் பிரபலம்.

இதைப் பயன்படுத்தி மற்றவர்களிடம் வாங்கி விற்கும் முருங்கைக்காயோடு கலந்து,பலசரக்குக்கடைக்காரரும் நல்ல லாபம் சம்பாதித்து விடுவார்.பல வருடங்களாக கந்தசாமி முருங்கைக்காய் கொண்டு வருவதால்கடைக்காரர் அதை எடை போட்டு பார்த்ததில்லை.

கந்தசாமி சொல்கின்ற எடையை அப்படியே நம்பி அதற்கு ஈடான பலசரக்குப் பொருட்களை கொடுத்து அனுப்புவார். காரணம் கந்தசாமியின் நேர்மையும், நாணயமும். அவர் நேர்மை தவறாதவர் என்பது எல்லோரும் அறிந்ததுதான்.

ஒரு நாள் கந்தசாமி பத்து கிலோ முருங்கைக்காயை கொடுத்துவிட்டு அதற்கான பொருட்களை வாங்கிச்சென்றார்.சிறிது நேரத்தில்....

பத்து கிலோ முருங்கைக்காய் மொத்தமாய் வேண்டும் என்று ஒரு சமையல்காரர் வந்து கேட்டார். அவருக்கு முன்னால் நிறுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காக கந்தசாமி கொண்டுவந்த பத்துக் கிலோ முருங்கைக்காயை எடுத்து தராசில் வைத்தார் கடைக்காரர்.அது ஒன்பது கிலோ என்று காட்டியது.

அதிர்ந்து போனார் கடைக்காரர். அன்று முழுவதும் கடைக்காரருக்குத் தூக்கமே வரவில்லை! கந்தசாமி மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம், இவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகத்தை செய்துவிட்டாரே என்று எண்ணியெண்ணி மருகினார்.

இத்தனை வருடங்களுக்காக இப்படி முட்டாள் தனமாக எடை குறைவான முருங்கைக்காயை வாங்கி ஏமாந்து விட்டோமே அடுத்த முறை கந்தசாமி வந்தால் சும்மா விடக்கூடாது என்று கடுங்கோபத்தில் இருந்தார் அவர்.

நான்கு நாட்கள் கழித்து கந்தசாமி மிகவும் சந்தோஷமாக வந்தார். நல்ல விளைச்சல் என்பதால் நிறையக் காய்கள் கொண்டு வந்திருந்தார்.

கையும் களவுமாக பிடிக்கவேண்டும் என்றுநினைத்தவாறு, எத்தனை கிலோ என்று கடைக்காரர் கேட்க, ஒரு கட்டு பத்து கிலோ என்றார் கந்தசாமி.

அவர் முன்னாலேயே எடைபோட்டு பார்க்க ஒவ்வொரு கட்டிலும் ஒன்பது கிலோ தான் இருந்தது. வந்த கோபத்தில் கடைக்காரர் பளார்,பளார் என கந்தசாமியின் கன்னத்தில் அறைந்தார்.

இத்தனை வருஷமா இப்படித் தான் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறாயா? கிராமத்துக்காரங்கள் ஏமாற்ற மாட்டாங்கள் என்று நம்பித்தானே நிறுத்துப் பார்க்காமல் அப்படியே வாங்கினேன்? இப்படி துரோகம் பண்ணிட்டியே சீய்...!! என துப்பினார். நிலை குலைந்து போனார் கந்தசாமி.

அய்யா...என்னை மன்னியுங்கள். நான் ஒரு ஏழை. எடைக் கல்லு வாங்கும் அளவுக்கு என்னிடம் காசு இல்லை...ஒவ்வொரு முறையும் நீங்கள் கொடுக்கிற ஒரு கிலோ பருப்பை ஒரு தட்டுலயும், இன்னொரு தட்டுல முருங்கைக்காயையும் வச்சுத்தான் எடைபோட்டு கொண்டு வருவேன்.இதைத் தவிர வேற எதுவும் நான் செய்யேல்லை.. என்று பதைபதைப்புடன் சொன்னார் கந்தசாமி.

கடைக்காரருக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது. தான் செய்த துரோகம் தனக்கே திரும்பி வந்ததை உணர்ந்தார் அவர். இத்தனை வருடங்களாக கந்தசாமியை ஏமாற்ற நினைத்த கடைக்காரரும்



அவருக்கே தெரியாமல் ஏமாந்து கொண்டு தான் இருந்திருக்கிறார் என்பது தெளிவானது.


இது தான் உலகநியதி. நாம் எதைத் தருகிறோமோஅதுதான் நமக்குத் திரும்ப வரும் ....

நல்லதைத் தந்தால் நல்லது வரும்,...

தீமையைத் தந்தால் தீமை வரும்!

வருகின்ற காலங்கள் வேண்டுமானால் தாமதமாகலாம். ஆனால்....

நிச்சயம் வரும். ஆகவே, நல்லதை மட்டுமே தருவோம், நல்லதை மட்டுமே விதைப்போம்.ஒரு மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். இதனை எப்போதும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.



# புதிதாய்ப் பிறந்தன சூரியன்கள்

சூரியன்கள் பூமியிலும்
புதிதாய் பிறந்தன!!
தொடவே முடியாது என
எண்ணிய வேளையில்
குதூரகலமாய் புன்னகைத்தன!!

எட்டவே அஞ்சும்
இலக்கினை.
கந்தக தணல் கொண்டு
காணாமல் செய்து
காற்றோடு கலந்திட்ட
சந்தன மேனியர்!!

சுட்டெரிக்கும்
சூரியப் புதல்வர்கள்!
கள்ளம் கபடமில்லா
வெள்ளை மலர்கள்!

அண்ணனின் கொள்கைக்கு
ஆணி வேர் இவர்கள்!!

தமக்காக வாழாமல்
தன் மண்ணுக்காய்.
ஓரடி நிலம் கூட
வேண்டாமல்
காற்றில் கரைந்த
கற்பூர தீபங்கள்!!

காற்றில் கரைந்து
கருமேனியான- எம்
சூரியப் புதல்வர்களையும்
மறைமுகமான
மாயவர்களையும்
எம் கண்ணீர் பூக்களால்
அர்ச்சிக்கிறோம்!!

கலை